# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 46
விலை ரூபாய் 20.00

தீபம்-46
தை இதழ் - 2018,
ஆரம்பம் 15 மாசி-2013.

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் (மாற் - 01 : 15)



இறை அருளினாலும் தூய திருத்தூது ஆட்சிப்பீடத்தின்
தயவினாலும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆகிய நாம்,
நம் மறைமாவட்டத்திலுள்ள சகல அருட்பணியாளர்கள்,
துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலை விசுவாசிகள்
அனைவருக்கும் இறைவனின் அருளும் ஆசீரும் வேண்டி எழுதும்

### 2018ம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணி சுற்றுமடல்

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, புத்தாண்டு வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் முதலில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். புலர்ந்திருக்கும் புத்தாண்டு உங்கள் அனைவரின் வாழ்விலும் ஆசீரையும் சுபீட்சத்தையும் கொண்டுவர வாழ்த்துகின்றேன். புத்தாண்டில் புது நம்பிக்கையோடும், புதிய உத்வேகத்தோடும் ஒரே குடும்பமாக இணைந்து அர்ப்பணிப்போடு அனைவரினதும் நல்வாழ்விற்காக செயல்படுவோம்.

கிறிஸ்தவ வாழ்வென்பது ஒரு நீண்ட திருப்பயணமாகும். இத்திருப்பயணத்தில் நாம் பலரை சந்திக்கின்றோம், பல சவால்களை எதிர்கொள்கின்றோம். இதனூடாக பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெறும் நாம் இப்பயணத்தில் இறைவன் எமக்கு அருளும் ஆசீர், ஞானம், வழிகாட்டல்களை வாழ்விலுணர்ந்து அவரது விருப்பத்திற்கு 'ஆம்' என்று பதில் கூறி அர்ப்பணிப்போடு செயல்படவும் வேண்டும். எமது இல்லங்கள், சமூகங்கள், பங்குகள், மறைமாவட்டத்தில் இறைவிருப்பத்தினையுணர்ந்து அதற்கேற்ப எமது பங்களிப்பினை வழங்கி இறைவனின் பெயரை ஓங்கச் செய்வோம்.

எமது மேய்ப்புப் பணியின் நோக்காகிய (vision) ஆன்மீகம், கல்வி, சமூகப் பணியை இலக்காகக் கொண்டு 2017ம் ஆண்டு தொடக்கம் ஐந்தாண்டுத் திட்டத்தினை நாம் அறிமுகம் செய்திருந்தோம். இதன் முதற்கட்டமாக 2017ம் ஆண்டு மூன்று முக்கிய கருப்பொருட்களில் பலதிட்டங்களை வகுத்து செயல்பட்டோம். இதற்கு ஒத்துழைத்த குருக்கள், துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலை விசுவாசிகளைப் பாராட்டுகின்றோம். விசுவாசிகளின் வயது, சந்தர்ப்ப சூழ்நிலைகள், காலத்தின் தேவைகள் போன்றவற்றை உணர்ந்து இவர்கள் தம்மை அர்ப்பணித்திருந்தார்கள்.

கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடம் 2018ம் ஆண்டும் நாம் எமது ஆன்மீக வளர்ச்சிக்காக மூன்று சிறப்பு கருப்பொருட்களை (தலைப்புகளை) முன்வைத்துள்ளோம்.

1. சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் (அன்பியம்) ஆண்டு
2. தூய மாற்கு நற்செய்திஆண்டு
3. ஞானப்பெற்றோர் ஆண்டு

### 1.சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் (அன்பியம்) ஆண்டு

எமது மறைமாவட்டத்தில் அனைத்துப் பங்குகளிலும் கத்தோலிக்க விசுவாசிகள் குழுமமாக இணைந்து இறைவார்த்தைப் பகிர்விலும் மற்றும் அதனூடாகப் பிறக்கும் விசுவாச வாழ்வுப் பகிர்விலும் சிறந்த சாட்சிகளாகத் திகழ வேண்டுமெனும் எண்ணத்தில் இக்கருத்திட்டம் அறிமுகம் செய்யப்படுகின்றது.

தொடக்ககாலத் திருச்சபையில் முதற் கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறை தனித்துவமானதாக அமைந்திருந்தது. அது இன்றைய எமது கிறிஸ்தவ வாழ்விற்கு சவாலாக அமைவதாகவும் உள்ளது. "அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்" (திப 2:42).

அன்பியம் எனும் பெயரில் இலங்கையில் ஒரு சில மறைமாவட்டங்களில் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் இயங்கி வந்தாலும் 1995ம் ஆண்டு தேசியமட்டத்தில் அன்பியம் பற்றிய சிறப்பான கருத்தரங்கு நடைபெற்றது. தொடர்ந்து 1996ம் ஆண்டை இலங்கை ஆயர் பேரவை சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது. இதன் மூலம் அனைத்து மறைமாவட்டங்களிலும் அன்பியங்களை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தொடக்க கால கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததைப்போல உறவுச்சமூகங்களாக (அன்பியங்களாக) கூடுகின்ற கிறிஸ்தவர்கள் முதலில் இறைவார்த்தையை வாசித்து அவ்வார்த்தை மூலமாக தாம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். அதே மனநிலையோடு சமூகத்தின் தேவைகளைக் கலந்தாலோசித்து சமூகத்திற்கு தம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்கின்றனர். இவ்வகையான பயிற்சியின் மூலமாக இறைவார்த்தைப் பகிர்வில் ஆழமான இறையனுபவம் பெறமுடியும். அதேவேளை இறைவாக்கை வாழ்ந்து காட்டவும் அதன்மூலம் வாழும் இறைவனுக்குச் சான்று பகரவும் முடியும்.

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்.....

## இயேசுவோடு



### 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் : தூய சதாசகாய அன்னை ஆலயம் கந்தளாய்

காலம் : 20 ஜனவரி 2018 (சனிக்கிழமை)


நேரம் : காலை 06 மணிமுதல் மாலை 06 மணி வரை

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக

**செபத்தில் இணைந்திடுவோம்.**

## தூய யோசேப் வாஸ் திருவிழா

### வேதத்தீவு




தொடர்ச்சி 07ம் பக்கத்தில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரே பேசும் அடியான் கேட்கிறேன் (1 சாமு 03 : 09)

# உங்களோடு பேசுகிறேன்..

Fr .Nc . அருள்வரதன்



புதிய வருடம் புதிய மாதம் மீண்டும் உங்களோடு பேச எனக்கு ஒரு வாய்ப்பு. எனக்கு நிறைந்த மகிழ்வினைத் தருகின்றது. வருடத்தின் முதல் நாள் தூய கன்னி மரியாள் இறைவனின் தாய் எனக் கொண்டாடி வருடத்தினை ஆரம்பித்தோம். அன்னை மரியாள் நமக்கும் தாய் என்பதை மறவாமல் அவர் வாழ்ந்து காட்டிய வழிமுறைகளை நாமும் பின்பற்றி வாழ்ந்து பயன்களை அடைவோம். வருடத்தின் ஏழாம் நாளிலே ஆண்டவரின் திருக்காட்சி விழாவினைக் கொண்டாடினோம். இது நமது விழா அதாவது புற இன மக்களின் விழா ஆண்டவரின் தரிசனம், என்றும் நம்மோடிருக்கிற இறைவனை வேண்டி நிற்போம். எட்டாம் நாளில் ஆண்டவரின் திருமுழுக்கைக் கொண்டாடினோம். நாமும் நமது திருமுழுக்கை நினைவிற்கொண்டு வாழ இறைவனிடம் வேண்டி நிற்போம்.

பதினெட்டுத் தொடக்கம் இருபத்தைந்து வரை கிறீஸ்தவ ஒன்றிணைப்பினைக் கொண்டாட உள்ளோம். ஒன்றிப்பென்பது வெறுமனே வார்த்தையாக மட்டும் நின்று விடாமல் உள்ளார்ந்த உணர்வுகளை வெளிக்காட்டும் வழிகளாக அமைய எதிர்பார்க்கின்றோம். பதினாறாம் திகதி தூய யோசேப் வாஸ் அடிகளாரின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். அடிகளாரின் வழிமுறைகளை நாமும் பின்பற்றி வாழ்ந்தால் நாமும் நற்பயன் அடைவது உறுதியானதே. மேலும் இருபத்தைந்திலே தூய பவுல் அடிகளாரின் மனமாற்றத்தை விழாவாகச் சிறப்பிக்கின்றோம். சிறப்பிப்பது மட்டும் போதாது. நமது மனங்களும் மாற்றங்களை இறைவனுக்கு ஏற்புடைய நிலைகளை காண இறைவனிடம் வேண்டுவோம்.

ஆன்மீக வழிகளிலே நற்கருணை ஆராதனை கந்தாளாய்ப் பங்கிலே கொண்டாடவுள்ளோம். பங்கு கொள்வோம் பங்கேற்றுப் பயனடைவோம். இம்மாதத்திலே பேராலய துணைப்பங்கான செபஸ்தியார் ஆலய மக்களும் தமது ஆலய விழாவினைக் கொண்டாடுகிறார்கள். இறை ஆசீருடன் கூடிய எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

மேலும் இம்மாதம் பதினான்காம் திகதி அருட்பணி அலெக்ஸ் செல்லையா, அருட்பணி D. அன்ரு ஸ்ரீபன், அருட்பணி J. சுதர்ஷன் இவர்கள் தமது குருத்துவ நாளை நினைவு கூறுகின்றார்கள். தொடர்ந்தும் இறைவனின் பணிகளிலே நலன்களைக் காண வாழ்த்துகின்றோம்.

மேலும் பதினான்காம் திகதி பொங்கல் தினமாகும். அனைத்து மக்களுக்கும் ஆசீர்களும் வாழ்த்துக்களும்.


அரசியலைப் பார்ப்போம். தேர்தல் நடைபெறப்போகிறது. காரசாரமான நிலைகளே அலைமோதிக் கொண்டிருக்கின்றன. எப்படி ஆரம்பிக்கப் போகின்றது? எப்படி முடிவடையப் போகின்றது? மக்களின் நிறைவான வாழ்வுக்கு ஏற்ற விதமாக முடிவுகள் அமையும் போது நாட்டிலே அமைதியும் ஆறுதலும் சமாதானமும் தோன்றும். பதவிகளைப் பற்றிப் பிடிப்பதற்கல்ல. மக்களை அமைதியில் வாழ வைக்கவே அனைத்தும் உருவாக்கப்படுகின்றன என்பதை நினைவிற்கொள்வோம். நல்லவைகள் விளைவாக இறைவனை வேண்டுவோம் எனக்கூறி நிற்கின்றேன்.

## குட்டிக்கதை

Fr .Nc



ஒரு குடும்பத்தலைவன். பிள்ளைகள் இருவர். அவருக்கு குடும்பத்தில் பற்றில்லை. அவரது மனைவி எப்படிச் சொன்னாலும் எதையுமே கேட்கமாட்டார். எப்போதம் குடியும் நித்திரையும் தான். மனைவி சிறிய அப்பக்கடை வைத்துக் கொண்டு குடும்பத்தைப் பார்க்கிறாள். உறவில்லாமல் குடும்பம் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒருவர் முதலில் தன்னை அன்பு செய்ய வேண்டும். தன்னை அன்பு செய்யாமல் பிறரை அன்பு செய்யவே முடியாது என்பதை இவரது வாழ்வு உறுதிப்படுத்தியது உண்மைதானே.



## ஆழ்ந்த அனுதாபங்கள்



திருகோணமலை தூய சூசையப்பர் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்தந்தை அன்ரனி பொன்சியன் அவர்களின் தந்தை எம். ரி. சூசையப்பு அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். இவர் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற திருமலைத் தீபம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றது.

01ம் பக்கத் தொடர்ச்சி...........

எனவே இவ்வருடம் நாம் அன்பியங்களை உருவாக்கவும், வழிகாட்டவும் விசுவாசிகளை ஆன்மீகத்தில் ஆழப்படுத்தவும் ஒருமித்து முயற்சிப்போம்.

செயல்பாடுகள்:

1. அன்பியம் பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல்.
2. சமூகத் தொடர்பாடல் மூலமாக அன்பிய அனுபவங்களைப் பகிரச் செய்தல்.
3. பங்குகள் மற்றும் மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களைப் பலப்படுத்துதல்.
4. அன்பியங்கள் இல்லாத பங்குகளில் ஊக்குவிப்பாளர்களை உருவாக்கி பயிற்சிகொடுத்தல்.
5. குருக்கள், துறவறத்தவருக்கான சிறப்புக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்.
6. மறையாசிரியர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்குத் தேவையான பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்துதல்.
7. அன்பியத்தின் பயன்கள் பற்றிய அனுபவப் பகிர்வுகளை பங்குகளில் ஒழுங்கு செய்தல்.

### 2. தூய மாற்கு நற்செய்தி ஆண்டு

2017 – 2021 வரைக்குமான ஐந்தாண்டுத்திட்டத்தில் நான்கு நற்செய்திகளையும் திருத்தூதர்பணி நூலையும் ஆழமாக கற்றுக்கொள்ளும் வண்ணம் கடந்த வருடத்தை தூய மத்தேயு நற்செய்திக்கான ஆண்டாக அறிவித்து பலநிகழ்ச்சிகளை செயல்படுத்தினோம். அதே போல இவ்வாண்டும் மாற்கு நற்செய்தியினை நாம் மையப்படுத்துகின்றோம். இதன்மூலம் எமது மறைமாவட்டத்தில் அனைத்து கத்தோலிக்க விசுவாசிகளும் நற்செய்தி நூல்கள் பற்றிய ஆழமான அறிவைப் பெற்றிருக்க வேண்டுமென்பதே எமது நோக்கமாகும்.

செயல்பாடுகள்

1. தூய மாற்கு நற்செய்தியை மையப்படுத்திய வளர்ந்தோருக்கான 'அடிப்படை வேதாகமக் கல்வி' வகுப்புகள் நடாத்துதல்.
2. மறைக்கல்வி நடுநிலையத்துடன் இணைந்து மாற்கு நற்செய்தியை மையப்படுத்திய போட்டிகளை நடாத்துதல்.
3. மறைமாவட்ட வெளியீடுகள் வழியாக தூய மாற்கு நற்செய்தியின் அறிவைப் பகிர்தல்.
4. தூய மாற்கு நற்செய்தியை ஒலிப்பதிவு செய்து அனைவரும் நற்செய்தியை கேட்கும் வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
5. சிறுவர், இளையோர். முதியோருக்கான விசேட கருத்தரங்குகள் அல்லது பயிற்சிப் பாசறைகள் நடாத்துதல்.

### 3. ஞானப் பெற்றோருக்கான ஆண்டு

இத்தலைப்பைப் பார்த்ததும் நீங்கள் ஆச்சரியப்படலாம். ஞானப்பெற்றோருக்கென சிறப்பு ஆண்டு தேவையா?எனும் கேள்வியும் உங்களுள் எழலாம். அவசியமானது என்றே நாம் கருதுகின்றோம். ஏனெனில் ஞானப்பெற்றோர் என்றால் யார்? இவர்களுடைய பொறுப்பு, கடமை என்ன? போன்ற கேள்விகள் மூலமாக நாம் பல விடயங்களை ஞானப்பெற்றோருக்கு எடுத்துக்கூறி அவர்களை வழிநடத்த வேண்டியது எமது கடமை. இன்னும், தமது ஞானக் குழந்தைகள் யாரென்பதை இவர்கள் தெளிவாக அறிந்திருந்து அவர்களது ஆன்மீக வளர்ச்சியில் அக்கறை செலுத்தவும் வேண்டும். அதே போல மறுபக்கத்தில் ஞானக்குழந்தைகள், சிறார்கள், வளர்ந்தோர் தமது ஞானப்பெற்றோர் யார் எனும் தெளிவைப் பெற்றிருக்கவும் வேண்டும். இப்பின்னணியில் இவ்வாண்டில் ஞானப்பெற்றோர் பற்றிய விழிப்புணர்வினைத் தூண்டும் வண்ணம் பங்குகள் தோறும் 'ஞானப்பெற்றோர் தினம்' சிறப்பிக்கப்பட வேண்டுமென கேட்டு நிற்கின்றோம்.

**செயல்பாடுகள்:**

1. ஞானப்பெற்றோரின் கடமைகள், பொறுப்புகள் பற்றிய தெளிவான விழிப்புணர்வு அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்தல்.
2. எனது ஞானப்பெற்றோர் யார? எனும் தேடலை மாணவர் மத்தியில் உருவாக்குதல்.
3. மறைக்கல்வி, மறையாசிரியருக்கான கருத்தரங்கும், பக்திச்சபைக் கூட்டங்களில் சிறப்பு உரையும் கலந்துரையாடலும் ஒழுங்கு செய்தல்.
4. ஒவ்வொரு பங்கும் வசதியான ஒரு தினத்தை "ஞானப்பெற்றோர் தினம்" என்று அறிவித்து சிறப்பித்தல்.
5. தொடர்பாடல் சாதனங்களை இதற்கென முழுமையாகப் பயன்படுத்துதல்.
6. பங்குகளில் திருமுழுக்கு திருவருட்சாதன நிகழ்வினை அனைத்து விசுவாசிகளும் கலந்து கொள்ளும் வண்ணம் பகிரங்கமாக திருப்பலியில் கொண்டாடுதல்.

இம்மூன்று கருப்பொருட்கள் பற்றிய ஆழமான கல்வியையும், விழிப்புணர்வையும் கொண்டுவர மறைமாவட்ட வெளியீடுகள், ஏனைய தொடர்பு சாதனங்களை நாம் பயன்படுத்துவோம். நாம் எடுக்கும் இம்முயற்சிகளுக்கு அனைவரும் ஒன்றிணைந்து எமது பங்களிப்பைச் செய்வோம்.

மறைமாவட்ட ஆன்மீக வளர்ச்சியில் முக்கிய விடயமாக மாதமொரு பங்கென 12 மணிநேர சிறப்பு நற்கருணை ஆராதனை சென்ற வருடம் முழுவதும் நடைபெற்றது. அதற்கு இன்னும் வலுச்சேர்க்கும் வண்ணம் தவக்காலத்தில் 24 மணிநேர நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. மேலும் தவக்கால ஆராதனைகள், திருச்சிலுவைப்பாதை, செபமாலைப் பவனி, உலக ஒற்றுமைக்காகவும் சமாதானத்திற்காகவும் அனைத்து ஆலயங்கள், நிறுவனங்கள், இல்லங்கள் மற்றும் துறவற இல்லங்களில் ஒரேநேரத்தில் திருச்செயபமாலை செபித்தது போன்ற ஆன்மீக முயற்சிகள் எமது ஆன்மீக வளர்ச்சிப் பயணத்தில் பெரும் பங்காற்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மறைமாவட்டத்தில் கல்விப்பணிக்கென நாம் மேற்கொண்ட முயற்சிகளும் பெரும் பயனைத் தருகின்றன. பங்கு மட்டங்களில் பங்குத் தந்தையரும் பல முயற்சிகளை மேற்கொண்டு பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் தேவையான விளக்கங்களையும் வழிகாட்டல்களையும் கொடுக்கின்றனர். அனைவரையும் நாம் பாராட்டுகின்றோம். இதுவொரு கூட்டு முயற்சியாகும். நாம் அனைவரும் தொடர்ந்தும் கூட்டாக அர்ப்பணிப்போடு செயல்பட்டு எமது மாணவர்களின் வாழ்வை வளமுள்ளதாக்குவோம்.

"கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" (1 யோவா 4:20). எமது விசுவாசம் உயிருள்ளதாக வாழ்ந்து காட்டப்பட வேண்டும். இதையே எமது திருத்தந்தை பிரான்சிஸ் வாழ்ந்து காட்டுகிறார். நாம் எம்மைச்சூழ உள்ளவர்களின் நிலையறிந்து எம்மால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்யத் தயங்கக்கூடாது. அன்பியங்களின் செயல்பாடு மூலமாக சமூகத்திற்கான எமது பங்களிப்பைச் செய்யலாம்.

குருக்கள், துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள், வழிபாடுகள், திருப்பலி அருட்சாதனங்கள், மறைக்கல்வி, திருமலைதீபம், அலையோசை, ஆலயத் திருவிழாக்கள் ~ இவையெல்லாம் எமக்குக் கிடைக்கும் ஆசீர். நன்றியுணர்வோடு நாம் இவற்றைப் பயன்படுத்தி எமது ஆன்மீக, சமூக வாழ்வில் வளர்ந்திடுவோம்.

இறுதியாக, பிறந்திருக்கும் புதிய ஆண்டு (2018) மகிழ்ச்சி, சமாதானம், அர்ப்பணம், ஒத்துழைப்பு, ஒன்றிப்பு போன்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தருவதாக. மூவொரு இறைவனின் ஆசீரையும், மரியன்னையின் வழிகாட்டலையும், தூய யோசேப் வாஸ் முனிவரின் பரிந்து பேசுதலையும் அனைத்துக் குடும்பங்கள் மீதும் இரந்து கேட்டு நிற்கின்றோம்.

கிறிஸ்துவில் என்றும் உங்கள் மேல் பற்றுள்ள,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
31.12.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 10

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



## பணிவு (தாழ்ச்சி)

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

நற்பண்புகளுக்குள்ளே இறுதியாகக் கண்டுகொள்ளப்படுவது பணிவு (humility) ஆகும். பணிவு என்பதன் உட்பொருளையும் அதன் நடைமுறைத்தன்மையையும் பொதுவாக பலரும் சிந்திப்பது மிகக் குறைவு. பணிவு என்ற பண்பின்றி சமூகத்தில் சௌகரியமாக வாழ்வதோ இருப்பதோ அல்லது வெற்றிகரமாக கடவுளை அணுகுவதோ முடியாத காரியமாகும். பணிவை வாழ்வில் கற்றுக்கொள்ள, கடைப்பிடிக்க 'இறைவன் இன்றி நான் ஒன்றுமில்லை: வெறுமனே பாவி', என்ற மனநிலை தேவை. என்னில் இருந்து ஏதாவது நன்மைத்தனம் வெளிப்படுகின்றது என்றால் அது இறைவனிடமிருந்தே வருகின்றது. எல்லாப் புகழும் இறைவனுக்கே உரியது. நாம் ஒவ்வொருவரும் யன்னல் கண்ணாடி போன்றவர்கள். யன்னல் கண்ணாடி ஊடாக சூரிய ஒளி பிரகாசிக்கின்றது என்பதை நாம் உணர்கின்றோம். சூரிய ஒளி தன்னூடாகத் தடையின்றி முடிந்தளவு பாச்சப்படுவதற்கு தன்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதே யன்னல் கண்ணாடி கொண்டிருக்க வேண்டிய பண்பாகும். அதே போல் இறைவனை என்னூடாக பேசவும் செயலாற்றவும் அனுமதிப்பதோடு இவ்விடயத்தில் தன்னை முன்னிலைப்படுத்துவதோ தற்புகழ்ச்சி கொள்வதோ கூடாது.

விரும்பத்தக்க, பணிவுள்ள ஒருவர் நல்ல நண்பனாய் இருப்பார் அன்பான, சாந்தமான மேலதிகாரியாய் இருப்பார். தனது மேலதிகாரியின் விருப்பத்திற்கு இணங்குபவராகவும் இருப்பார். பணிவு ஆசிரியருக்கு எவ்வளவு முக்கியமானதென இப்பொழுது நமக்குப் புரிந்திருக்கும். பணிவுள்ள ஆசிரியர் ஒருவர் தனது தவறை மாணவர்கள் மூலம்கூடத் திருத்திக் கொள்ளும் அளவுக்கு திறந்த மனப்பான்மை உள்ளவராக இருப்பார். தனது பலவீனத்தை நன்குணர்ந்து அதைத் திருத்திக்கொண்டு முன்னேற முயற்சிப்பார். அவர் சண்டை சச்சரவு செய்ய மாட்டார். பாடசாலையின் அமைதியான சூழலைக் குழப்பமாட்டார். மாறாக அமைதியின் மையமாகவும் ஊற்றாகவும் திகழ்வார். வகுப்பறையில் ஒழுக்கத்தைப் பேணும் அதே வேளை தண்டணை வழங்குவதில் கொடூரமாகவோ கடுமையாகவோ இருக்கமாட்டார். தமது சக ஆசிரியருடன் ஒத்துப்போகின்றவராக இருப்பார்.

நகைச்சுவை உணர்வு உடையவராகவும், பகிடியை இரசிப்பவராகவும், தன்னைப் பற்றிய பகிடியைக்கூட இரசிப்பவராகவும் இருப்பார். சிற்றாழியர்களோடு கூட அன்பாகவும், கரிசனையாகவும், மரியாதையாகவும் நடந்துகொள்வார். அவர்கள் மேல் அதிகாரத்தை ஒருபோதும் பிரயோகிக்க மாட்டார். தனது நலனுக்காக அவர்களை சாதகமாக பயன்படுத்த மாட்டார்.

பணிவுள்ள ஆசிரியர் கற்பித்தல் தேர்ச்சிகள், நுட்பங்கள், பாடஅறிவு என்பவற்றில் மற்றய ஆசிரியர்களோடு ஒப்பிடுகையில் சற்றுக் குறைந்தவராக இருந்தாலும் பாடசாலைக்கு பெரும் சொத்தாக கருதப்படுவார். சிரேஷ்ட ஆசிரியர்கள், சக ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஏன் பாடசாலை சமூகத்திற்கு வேண்டியவராகவும், அன்பானவராகவும், பாராட்டத்தக்கவராகவும் விளங்குவார்.

பணிவுள்ள ஆசிரியர் ஒருவர் நல்ல செவிமடுப்பவராகவும் இருப்பார். ஏனைய சக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செவிமடுப்பதன் மூலமும் ஆய்ந்தறிவதன் முலமும் பல அறிவார்ந்த விடயங்களைத் தெரிந்துகொள்வதோடு தன்னைப் பற்றியும் மென்மேலும் அறிந்து கொள்வார். தன்னைப் பற்றிய கேலிப்பேச்சையோ, பரிகாசத்தையோ, தன்னை மேலும் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பமாக கருதிக்கொள்வதோடு இதுவரை கவனத்தில் கொள்ளாத தனது தவறு அல்லது பலவீனத்தைப் பற்றி விழிப்புணர்வு கொள்ளும் சந்தர்ப்பமாகவும் ஏற்றுக் கொள்வார்.

தொடரும்..................

# கவிதைப் போட்டி முடிவுகள்

## நன்மையைக் காணவே .......... FR. NC

சரியான கவிதை வரிகள்

- உண்மையில் வாழ்வு உயர்ந்தோங்கி
- துயர்களைத் தாண்டியும் காண்போமே
- துணிவோம் அதனைக் கண்டிடவே
- உயர்வின் நிலைகளைக் கண்டிடுமே
- தூய்மைகள் மறைந்து போவதுண்மை
- தீமைகள் நிறைய வாழ்வினிலே
- பாவம் பழிகளை விலக்கி வாழ்வில்
- நன்மைகளைத் தேடித் தொடரும் போது



பங்குபற்றியோர் : 10 பேர்
சரியாக வடிவமைத்தோர் : 02 பேர்

பரிசுக்குரியவர்கள்

திரேசா சேவியர்
37/3, வித்தியாலயம் வீதி


ஆர்.எப். ஆன் வஜிரா
21/3, வித்தியாலயம் வீதி

பரிசுத்தொகை சமமாக வழங்கப்படும்.

## அமைதியைக்காணவே .......... FR. NC

சரியான கவிதை வரிகள்

- அமைதியைக் காண எங்கும்
- ஆவலாய்த் தேடுகின்றோம்
- அமைதியே நிலை கொள்ளாமல்
- கலைந்தது மறையும் போது
- கலவரமும் ஆரவாரங்கள்
- கட்டவிழ்ந்து கலையும்போது
- அமைதியை எங்கே காண்போமோ
- ஒவ்வொரு மனமும் அமைதியைத் தேட
- உண்மையில் அமைதி உதயமாகுமே
- வேண்டுவோம் இறைவனை அமைதியைக் காணவே



பங்குபற்றியோர் : 06 பேர்
எவரும் சரியாக வடிவமைக்கவில்லை.

# மறைக்கல்வி கற்போம் - 27

01. தூய மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் யார்?
**யோவான்**

02. தூய மாற்கு நற்செய்தி திருவிவிலியத்தில் ( புதிய ஏற்பாட்டில் ) எத்தனையாவது என்று கருதப்படுகின்றது?
**முதலாவது நற்செய்தி**

03. தூய மாற்கு நற்செய்தி யாருடைய போதனையின் அடிப்படையில் எழுதப்பட்டதாக கருதப்படுகின்றது?
**பேதுருவின் போதனைகளின்படி**

04. தூய மாற்கு எழுதப்பட்ட காலம் எது?
**கி.பி. 64ஆம் ஆண்டில் இருந்து 70ஆம் ஆண்டுக்குள்**

05. எந்த சூழ்நிலையில் மாற்கு நற்செய்தி எழுதப்பட்டது?
**எருசலேம் அழிக்கப்படவிருந்த சூழலில், உரோமையரால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட காலத்தில்**

06. திருச்சபையின் இறையாட்சிப் பணியின் முதல் களமாக அமைந்தது எது?
**அன்பியம்**

07. அன்பியம் என்றால் என்ன ?
**பல குடும்பங்கள் ஒன்றிணைந்து கூடிவந்து இறைவார்த்தையில் - ஒளியில் இறையாட்சி விழுமியங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒரு கூட்டான முறையில் செயல்வடிவம் கொடுக்கக்கூடிய களமும் தளமும் அன்பியமாகும்.**

08. அன்பியம் ( திருச்சபை ) இதன் விளக்கங்கள் எவை?
**பகிர்வின் அடையாளம்**
**ஒற்றுமையின் அடையாளம்**
**நட்புறவின் அடையாளம்**
**பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்த உறவு**
**இறைவனுடன் உள்ள நெருங்கிய ஒன்றிப்பு**

09. முதல் அன்பியம் எங்கே ஆரம்பமானது?
**இயேசு தன் பொதுவாழ்வை தொடங்கிய போது**

10. அன்பியத்தில் தவிர்க்கக் கூடிய பண்புகள்?
**புறங்கூறுதல், பகையுணர்வு, நான் என்ற எண்ணம், தாழ்வு மனப்பான்மை, பிடிவாதம், அகந்தை, அதிகாரப்போக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் பொறுப்புணர்வு

## பிள்ளைகள் மற்றும் திருமணத்தின் மட்டில் நெறிமுறைகளின் பூரணத்துவம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

அருட். சகோ . எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,
தேசிய குருமடம்

எனவே குடும்பத்தில் உள்ள தனிநபருக்கு நல்வாழ்வுக்கான வாய்ப்புக்கள் இல்லையெனில் சமூகத்திற்கோ அல்லது திருச்சபைக்கோ சிறந்த சேவையை குடும்பத்தால் வழங்க முடியாது. மேலும் நல்வாழ்வுக்கான வழிமுறைகளை மேற்கொள்ளும் குடும்பங்கள் மாத்திரமே சமூகத்திலும், திருச்சபையிலும் முதன்மையானதாக கருதப்படுகின்றன. இக் கோட்பாடு மேலும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும். குழந்தைகளின் நல்வாழ்வு, குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அனுகூலம். பிரதிகூலம் இரண்டிலும் பாரிய கடமைகள் சரிசமனாக உள்ளன என வலியுறுத்துகின்றது. கணவன், மனைவி இருவருக்கும் கடமைகள் அதிகம், குறைவு என வாதாட முடியாது. ஏனெனில் இருவருக்கும் இருக்கின்ற பொறுப்பு சரிசமனானது.

குடும்பங்களில் பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பு கூடுதலாக அன்னையர்களுக்கு இருக்கிறது என நாம் தீர்மானித்து விடுகிறோம். ஆனால் இப்பொறுப்பு பக்கசார்பானதல்ல. கணவன், மனைவி தாம் தாம் நிலைநிறுத்திய திருமண உடன்படிக்கைக்கு அமைவாக பிள்ளைகளின் நல்வாழ்வுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வது அவசியமானதொன்றாகும். சமநிலையற்ற கணவன் மனைவியின் உறவு பிள்ளைகளின் நன்னடத்தைக்கும் நல் வாழ்வுக்கும் சவாலாகவும் குழந்தை துஷ்பிரயோகத்திற்கு காரணியாகவும் அமைந்து விடுகிறது. எனவே, பெற்றோர் தங்களின் பொறுப்பை உணர்ந்தவர்களாக வீட்டில் வன்முறைகளை நிறுத்தவும் குழந்தைகளின் நல்வாழ்வை வளமாக்கவும் அவர்களின் எதிர்காலத்திற்கு திடமான அடித்தளத்தை உருவாக்குபவர்களாகவும் சமுதாயத்தில் திகழ வேண்டும். மேலும் பிள்ளைகளை சுயசிந்தனையுடன் முடிவெடுக்கும் பிரஜைகளாகவும் இன்னல்கள் சவால்கள் வருகின்ற வேளையில் தளரா மனதுடன் எதிர்கொள்ளும் திடமுள்ளவர்களாகவும் உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### பகுதி II

### திருமணம் மற்றும் குழந்தைகளின் நெறிமுறையில் நால்வகை மூலைக்கற்கள்

குடும்பம், பிள்ளைகள் மற்றும் பெற்றோர் உறவு கணவன் மற்றும் மனைவி உறவு என்ற நோக்குகையில் குணவியல் பண்புகள் பலவற்றை நாம் ஆராயலாம். ஆனால் இவ் உபதலைப்பின் கீழ் நமது நோக்கம் என்னவெனில் சமூக நன்னெறிக்கேற்ப ஓர் இல்லற வாழ்வில் அடித்தளமாக அமையும் நால்வகை குணப்பண்புகளை ஆராய்வதேயாகும்.

ஓர் கட்டிடம் சமநிலையாகவும், நேர்த்தியாகவும் இருப்பதற்கு மூலைக்கற்கள் எவ்வாறு அவசியமானதாக உள்ளதோ அதேபோல் பொறுப்புணர்வு, விரிதிறன், தொடர்பகத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய முக்கியமான மூலைக்கற்கள் குடும்பம் எனும் கட்டிடத்திற்கு மிகவும் அவசியமாகவும் உள்ளது. இவ் நால்வகை குணவியல்புகளையும் பற்றி ஆராய்வோம்.

**I. பொறுப்புணர்வு**

குடும்பம் சமூகத்தின் அடிப்படை அலகாகவும் எதிர்கால பிரஜைகளின் நல்வாழ்விற்கு பொறுப்பாகவும், இருப்பதால் பொறப்பணர்வு என்னும் குணவியல் பண்பு அடிப்படையான அம்சமாக குடும்பத்தில் திகழ்கின்றது.

பொறுப்பணர்வு பிள்ளைகளின் நலனின் நிமித்தம் திருமணத்திற்கு ஆதரவாகவும், ஊக்கமளிப்பதாகவும் விளங்குகிறது. மேலும் பொறுப்பணர்வு குடும்ப பிளவுகளையும் மணமுறிவுகளையும் குறைக்கும் ஒரு கருவியாகவும் திகழ்கிறது.......

தொடரும்.........................

# தூய செபஸ்தியார்



தூய செபஸ்தியார் 256ஆம் ஆண்டு பிறந்தார். அவர் ஒரு கிறிஸ்தவர். இவர் ஒரு மறைந்த கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து வந்தார். 283ம் ஆண்டு அவர் ரோமன் போர்ப்படையில் பணியில் சேர்ந்தார். இவருடைய பணித்திறமையைப் பார்த்து வியந்தனர். ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவர் என்று அறியாமலே அவரை ரோமானிய படையின் தளபதியாக பதவி உயர்த்தப் பட்டார். ஆனால் அவர் பல கைதிகளை நல்ல கிறிஸ்தவர் களாக மரிக்க உதவி செய்தார்.

அவர் ஒரு கிறிஸ்தவர் என்று தெரிய வந்த போது அவரையும் கொலை செய்ய வேண்டுமென்று ரோமன் உயர் அதிகாரி உத்தரவிட்டான். அவருக்கு ஒரு வரம் கொடுக்கப்பட்டிருந்தது. அது என்னவென்றால் சிலுவை அடையாளத்தினால் குணமாக்கும் வரம். அந்த வரத்தினால் அவர் பலரை குணமாக்கினார். ரோமன் உயர் அதிகாரி, செயஸ்தியார் தன் இனத்தைக் காட்டிக் கொடுத்த துரோகி. எனவே அவரை மிக கொடூரமாக கொல்ல வேண்டும் என்று எண்ணி அவரை ஒரு மரத்தில் கட்டி அம்பால் எய்து கொல்ல உத்தரவிட்டான். செபஸ்தியாரின் மீது அம்புகள் எய்தனர். அவர் விரைவில் இறந்து விடுவார் என்று எண்ணி அவரை எய்த அம்புகளோடு அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர். ஆனால் ஐரின் என்ற பெண் விரைந்து வந்து அவரது உடலை கல்லறையில் அடக்கம் செய்ய வந்தாள். செபஸ்தியார் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று கண்டு, செபஸ்தியாரை தன் வீட்டில் மறைவாக வைத்து மருத்துவ உதவிகளைச் செய்து வந்தார். அவரும் விரைவில் குணமாகினார்.

விரைவில் மீண்டும் தன்னை கொலை செய்ய ஆணையிட்ட அந்த ரோமன் அதிகாரியிடம் சென்று கிறிஸ்துவைப் பற்றி போதித்தார். தன்னால் கொலை செய்யப்பட்ட செபஸ்தியார் மீண்டும் உயிருடன் தன்னிடம் வந்து போதிப்பதைப் பற்றி அதிசயப்பட்டான். அந்த ரோமன் அதிகாரி மீண்டும் அவரைக் கொலை செய்ய ஆணையிட்டான். இந்த முறை செபஸ்தியாரை அடித்துக் கொன்று சகதியில் எறிந்து விட்டனர். அவர் ஐரின் என்ற பெண்ணக்கு காட்சியளித்து தன் உடல் இருக்கும் இடத்திற்குச் சென்று அதை அடக்கம் பண்ண கேட்டுக் கொண்டார். அவரும் சென்று அவரது உடலை நல்ல முறையில் அடக்கம் செய்தார்.

தூய செபஸ்தியார் பல பிணி, நோய்களை குணமாக்க வல்லவர். அதனால் தான் எப்பொழுது எல்லாம் பிளேக், காலரா போன்ற நோய்கள் வருகிறதோ அப்போது தூய செபஸ்தியார் உருவ சுரூபத்தை ஊர் முழுவதும் பவனியாக வருகிறார்கள் நம் கிறிஸ்தவர்கள்.

தகவல் : இணையத்தளம்

# தூய யோசேப் வாஸ்

இந்தியாவின் கோவாவில் பிறந்து, இலங்கையின் கத்தோலிக்க நம்பிக்கை ஒல்லாந்தரால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளையில் இலங்கை இலங்கை கத்தோலிக்கருக்க சேவை செய்வதற்கு வந்த கத்தோலிக்க குருவானவர் ஆவார். இவர் ஈழத்தில் யோசேப்வாஸ் முனீந்திரர் எனவும் அழைக்கப்பட்டார். பிற்காலத்தில் இவர் கண்டி இராச்சியத்தில் தங்கியிருந்து இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையை மீளமைத்தார்.

கத்தோலிக்கர்களுக்கு இவர் ஆற்றிய பணிகளுக்காக இவர் இலங்கையின் திருத்தூதர் என அழைக்கப்பட்டார். 1995 ஜனவரி 21ஆம் நாள் கொழும்பு நகரில் இவருக்குத் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அருளாளர் பட்டம் வழங்கினார். 2015 ஜனவரி 14 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் காலிமுகத்திடலில் வைத்தப் புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

### யாழ்ப்பாணம் வருகை

கி.பி. 1685ஆம் ஆண்டில் கோவாவின் Oratary of St. Philip Neri இல் இணைந்த தூய யோசேப் வாஸ் அடிகளார் 1687ஆம் ஆண்டு ஏப்ரலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அப்போது இலங்கையில் ஆட்சியில் இருந்த ஒல்லாந்தர் கால்வினிசத்தைப் பின்பற்றியவரகள். எனவே கத்தோலிக்கரையம், குருமாரையும் கொலை செய்தனர். பாடசாலைகளைத் தரைமட்டமாக்கினர். இதனால் பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த அடிகளாருக்க சில்லாலையூர் மக்கள் புகலிடம் வழங்கினர். அவர் அங்கேயே தங்கி சில்லாலையிலும் அதனைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் கத்தோலிக்க மக்களுக்கு தமது சேவையை வழங்கினார். பின்னர் மாறுவேடத்தில் கால்நடையில் 24 ஆண்டுகளாக வன்னி, புத்தளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்று மதப்பிரசாரம் செய்தார்.

### கண்டிக்கு விஜயம்

1692ல் கண்டிக்குச் சென்ற வாஸ் அடிகளார் அங்கு றோமன் கத்தோலிக்க மதத்தை மீளத்தாபிக்கப் பெருமுயற்சி செய்தார். இதனால் அவர் அங்கு இரண்டாண்டுகள் சிறையிலும் இருக்க நேரிட்டது. கண்டியிலிருந்தே தமது சேவையைத் தொடர்ந்த வாஸ் அடிகள் 1696ல் இலங்கையின் Vicar General பதவியைப் பெற்றார். 1710ம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி தூய வியாகுலமாதா கோயில் வளவில் சிறு ஓலைக் கோயில் கட்டிப் பலி ஒப்புக்



கொடுக்கும் போது காட்டிக் கொடுக்கப்பட்டு மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார். 1711ம் ஆண்டில் கண்டியில் காலமானார்.

### தமிழருக்கும் சிங்களவருக்கும் பணி


வாஸ் அடிகளார் இலங்கை நாட்டில் தமிழ் மக்கள் நடு
விலும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் திருவிவிலியத்தை தமிழிலும் சிங்களத்திலும் பெயர்த்தார். அந்த இருமொழிகளிலும் மக்கள் கடவுளை வழிபடுவதற்கான நூல்களையும் இயற்றினார். மடுவில் அமைந்துள்ள அன்னை மரியா கோவிலைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு வாஸ் அடிகளார் துணைபுரிந்தார். மேலும், கிறிஸ்தவ நம்பிக்கையை இலங்கையில் பரப்புகையில் அந்தந்த மக்களின் பண்பாட்டுப் பாணிகளை மதிக்க வேண்டும் என்பதிலும் அவர் கருத்தாயிருந்தார். மொழி, இன வேறுபாடுகளைக் களைந்து, கடவுள் நம்பிக்கையில் மக்கள் வளர வேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாக இருந்தது.

### புனிதர் பட்டம்

திருத்தந்தை பிரான்சிஸ் 2015, ஜனவரி 14 அன்று தனது இலங்கை திருப்பயணத்தின்போது காலி முகத்திடலில் இடம்பெற்ற திருப்பலி நிகழ்வில் வாஸ் அடிகளாருக்க புனிதர் பட்டம் அளித்தார். புனிதர் பட்டமளிப்புக்குத் தேவைப்படும் இரண்டாம் **புதுமையினை வேண்டாம்** என்று திருத்தந்தை வாஸ் அடிகளாருக்கு விதிவிலக்கு அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இலங்கையில் முதலாவது புனிதர் பட்டம் பெறுபவர் அவராவார்.

தகவல் : இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மகிழ்வு

அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## அலகு 2 — குடும்பங்களின் அனுபவங்களும், சவால்களும்



இல 31 – குடும்பங்களே சமுதாயத்தின் அத்திவாரம், அடிப்படை, எனவே அத்தகைய குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அவதானமாக மதிப்பீடு செய்ய வேண்டும்

இல 32 – இன்றைய நவீன உலகில் நேர்மறை மற்றும் எதிர்மறை அசைவுகள் உண்டு. அவை முறையே குடும்பங்களின் வளர்ச்சிற்கு வாய்ப்பாகவும் மறுபுறம் அவற்றின் தேய்விற்கு அச்சுறுத்தலாகவும் உள்ளன.

இல 33 – தன்னிச்சையாக செயற்படல் மற்றும் சடப்பொருள் வாதம் போன்ற பண்புகளை நோக்கிய நகர்வானது உண்மையான மற்றும் தன்னையே பிறருக்கு அளிக்கின்ற அன்பு போன்ற பண்புகள் காணப்படுகின்ற குடும்பங்களுக்கு எதிரியாக காணப்படுகின்றன.

இல 34 – உண்மையைக்குறித்த முழுமையான புரிதல் இன்மையும், அடுத்தவரின் நன்மைத் தனத்தை விட ஒருவரின் தனிப்பட்ட விருப்பும் இணைந்து எடுக்கப்படுகின்ற முடிவினால் குடும்பத்தில் பிரச்சனையும், உறவில் விருப்பற்றமற்ற தன்மையும் ஏற்படுகின்றன.

இல 35 – உலகின் நன்மைக்காக கிறிஸ்தவர்கள் திருமணம் மற்றும் குடும்பம் என்பனவற்றின் உண்மையைத் தன்மையினை எடுத்துரைக்க வேண்டும். அவ்வாறு எடுத்துரைக்கின்றபோது இன்றைய தீமைகளைக்குறித்து மட்டும் முறையிடாமலும், சட்டம்சார்பு நிலையை மையப்படுத்தாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இல 36 – குடும்பங்களின் இன்றைய நிலைமைக்கான காரணங்கள் எமது தவறுகளினாலேயே ஏற்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வதுடன், அடுத்துவரும் தலைமுறைக் குடும்பங்களுக்கு நிலையானதும், விரும்பத்தக்கதும், ஏற்புடையதுமான உதவிகளைப் புரியவேண்டும்.

இல 37 – திருச்சபையானது கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் பிரகாரம் தனது மனச்சாட்சியினை வடிமைத்துக்கொண்டு, குடும்பங்கள் கடவுளின் அருளில் வளர உதவ வேண்டும்.

இல 38 ~ இன்றும்கூட பெரும்பாலான மக்கள் குடும்ப உறவினை மதிப்பதுடன், சரியான முறையில் திருச்சபையின் கொடைகளை அளிக்க திருச்சபை அளிக்க முன்வருமானால், திருச்சபையின் உதவியினை பெற்றுக்கொள்ளவும் காத்திருக்கின்றார்கள்.

இல 39 – எமது சமூகத்தின் தன்னிச்சையான மற்றும் தன்பால் கவர்ச்சி போன்ற முறைமைகள் குடும்பத்தில் அர்ப்பணம் மற்றும் தன்னையே அடுத்தவருக்கு கையளித்தல் போன்ற செயற்பாடுகளை கடினமாக்குகின்றது.

இல 40 ~ இன்று இளம் பராயத்தினர் குடும்ப வாழ்வில் இணைந்து கொள்வதற்கு பல காரணிகள் தடையாக காணப்படுகின்றன, அவற்றை நீக்குவதற்கான சரியான, பலமுள்ள வாதங்களை கண்பிடித்து முன்வைக்க வேண்டும்.

இல 41 – பெரும்பாலான மக்கள் பல்வேறுபட்ட காரணங்களால் குடும்ப வாழ்வில் இன்று எதிர்கொள்ளக்கூடிய சவால்களை மேற்கொள்ளக்கூடிய அத்தியாவசியமான ஆற்றலும், வழிமுறைகளுமின்றி தவிக்கின்றார்கள்.

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

இல 42 – தன்னிச்சையான செயற்பாடுகள், நுகர்வுக் கலாசாரம் மற்றும் ஏனைய சமூக காரணிகளால் முன்மொழியப்படுகின்ற கருத்தடை மற்றும் கருச்சிதைவு மனப்பாங்கு நிலை, பலவிடங்களில் சனத்தொகை விருத்தியில் பலத்த பின்னடைவினை உண்டாக்கியுள்ளது.

இல 43 – குடும்பங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளை மேற்கொள்ள உதவிசெய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

இல 44 – பொருளாதார மற்றும் தொழில்சார் நிலைமைகளால் குடும்பங்கள்மீது பிரயோகிக்கப் படுகின்ற அழுத்தங்களானது திருச்சபையின் மிகுந்த கவனத்திற்குரிய தொன்றாகும்.

இல 45 – உலகம் முழுவதும் அதிகரித்து வருகின்ற பல்வேறு வடிவங்களிலான சிறுவர் (குழந்தை) துஷ்பிரயோகம் மற்றும் கவனிப்பாரற்ற நிலைமைகள் அவர்கள்மீதான மிகப்பெரிய அவமதிப்பாகும்.

இல 46 – தங்கள் தெரிவின் பிரகாரமோ அல்லது அத்தியாவசிய தேவையின் நிமித்தமோ புதிய இடங்களுக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு திருச்சபை உதவ வேண்டும்.

இல 47 – வலுக்குறைந்தவர்களை (மாற்றுத் திறனாளிகள்) குடும்பத்தில் வரவேற்பதானது திறந்த உள்ளத்துடன் வாழ்வினை வரவேற்கின்றோம் மற்றும் நமது குடும்பத்திற்காக, சமூகத்திற்காக தியாகங்களையும் மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம் என்பதன் அடையாளமாகும்.

இல 48 – குடும்பங்களில் முதியோரை நடாத்தும் முறையானது எப்போதும் அவர்களது மாண்பினை மதிப்பதுடன், எந்தவேளையிலும் கருணைக்கொலை அல்லது தற்கொலைக்கான உதவி போன்றவற்றை தடுப்பதும், நமது குடும்ப பிணைப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள கிடைக்கின்ற இன்னுமொரு வாய்ப்பாகும்

இல 49 – வறுமையின் காரணமாக நற்செய்தியின் செய்தியினை வாழப் போராட்டம் நடாத்தும் குடும்பங்களுக்கு திருச்சபை அன்பின் அன்னையாக திகழ வேண்டும்.

இல 50 – இன்றைய நவீன உலகினாலே குடும்பங்களுக்கு பல்வேறுபட்ட சவால்கள் முன்வைக்கப்படுகின்றன.

இல 51 – போதைப்பொருள் பாவனை, ஏனைய அடிமைத்தனங்கள், வன்முறை, பலதரப்பட்ட வெறுப்புக்கள் போன்றவை குடும்பங்களுக்கு ஏற்படும் ஒருசில முக்கியமான சவால்களாகும்.

இல 52 – நிலைத்த ஆயுளைத் கொண்டிராததும், வாழ்வினை வழங்காத உறவுகளும் குடும்ப வாழ்விற்கு எதிரிகளாகும். அந்த வகையில் ஒரினச்சேர்க்கை (same-sex unions) திருமணத்திற்கு எந்தவகையிலும் ஈடாகாது.

இல 53 ~ இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் தன்னிச்சையான கருத்தியலுக்கேற்ப குடும்பங்களின் திட்டத்தினை சுயநல அன்பு என்று வடிவமைக்கின்றன. ஆயினும் அடுத்தவரை அன்புசெய்வதே குடும்பம் என்னும் கருத்தினூடாகவே புதுப்பித்தலை உருவாக்கமுடியும்.

இல 54 ~ இன்றைய காலகட்டத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமான சமமான மாண்பு பற்றிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளையில் பழைய முறையிலான பாகுபாடுகள் இருக்கத்தக்கதாக, நவீன வடிவிலான பாகு பாடுகளும் முன்னேடுக்கப்படுகின்றன.

இல 55 – குடும்பத்தில் தந்தையின் பணியானது குடும்பத்தோடும், பிள்ளைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியோடும் ஒருங்கிணைக்கப்பட்டு உறுதிசெய்வதாகும்.

இல 56 – நாம் ஒருபோதும் ஆணுக்கும் பெண்ணுமிடையிலான வேறுபாட்டினை மறுக்கவோ அல்லது அடக்கவோகூடாது மாறாக அவ்வாறான வேறுபாடு அவர்களுக்கான தேவையினை பூர்த்திசெய்வதுடன் ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு அது அத்தியாவசியமானது.

இல 57 – விமர்சனம் மற்றும் குற்றம்காணல் அணுகுமுறை குடும்பத்திற்கு உதவியாக இருக்காது, எனவே அதனைவிடுத்து, ஆக்கபூர்வமான மற்றும் அன்பான வழி முறைகளைக் கொண்டு குடும்ப வாழ்வினை கட்டியெழுப்ப வேண்டும்.

(அத்தியாயம் மூன்று அடுத்த இதழில் தொடரும்).

## சிறுவர்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்லுங்கள்



இரு பாடசாலைச் சிறுவர்களை ஏற்றிய வண்ணம் அவர்களது தந்தை மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்கு வேகமாகப் புறப்பட்டார். அவரது பிள்ளைகளும் "அப்பா நேரமாகிவிட்டது இன்னும் வேகமாகப் போங்கோ" என்றார்கள். தந்தையோ தலைக்கவசம் அணிந்திருந்தார். ஆனால் அவரது பிள்ளைகள் இருவருக்கும் எதுவித கவசமுமில்லை. தந்தையார் இன்னும் வேகமாகப் போனார். திடீரென அவ்வீதியின் குறுக்கொழுங்கையில் ஒரு ஆட்டோ வாகனம் எதிர்பாராமல் வர மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி அருகிலுள்ள மின்கம்பத்தில் மோதுண்டதில் இரு பிள்ளைகளுக்கும் தலையில் பலத்த காயம். பிள்ளைகள் பேச்சு மூச்சற்றவராக இருந்தனர். தந்தையாருக்கு தலைக்கவசம் இருந்ததில் பலத்த காயம் எதுவுமில்லை. என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தார்கள்.

தற்போது நாளாந்த நிகழ்வாக இப்படி நடைபெறுவதுண்டு. பெரியவர்கள் பூரணமாகப் பாதுகாப்பாகச் செல்கின்றார்கள். ஆனால் ஏற்றிச் செல்லும் சிறவர்களைப் பற்றிய சிந்தனை இல்லை. விபத்து ஏற்பட்ட பின் தான் ஞானம் பிறக்கும். இப்படிச் செய்பவர்கள் யாராவது இருந்தால் சிறுவர்களின் உயிர் மீது அக்கறை கொண்டு பாதுகாக்க வழி செய்யமாறு கேட்டுக் கொள்ளும்..............................

ச. அந்தோனிப்பிள்ளை ~ அ.இ.ச.நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிய பாதை FR.NC

○08 வரிக்கவிதை
○சரியாக வடிவமையுங்கள்
○எல்லோரும் கலந்து கொள்ளலாம்
○எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
○குலுக்கள் முறையில் தெரிவு இடம்பெறும்

- முதலாம் இடம் 500/-
- இரண்டாம் இடம் 300/-
- மூன்றாம் இடம் 200/-

முடிவுத்திகதி 25.02.2018

இதோ கவிதை வரிகள்......
❖தீயவை நிறைந்த வாழ்வில்
❖சோதனைக் களங்களாகி
❖தூய்மையை மறைக்கும்போது
❖சோர்வடையும் வாழ்வு இங்கே
❖உண்மையை மறவாமலென்றும்
❖நேர்வழியில் செல்லும்போது
❖கடினமே அவ்வாழ்வு என்றாலும்
❖நிலையான உயர்வங்கே தோன்றிடுமே

## புதுவாழ்வைத் தேடியே ........

அருட்பணி N.C. அருள்வரதன்

அமைதியைத் தேடும்
உள்ளங்களெங்கும்
ஆவலாய் எங்கும் காத்திருக்க
அமைதியே கலைந்து
அவலங்களாகி
ஆறாய்ப் பெருகிச் செல்கிறதே



போர்கண்ட விளைவுகள்
ஒருபுறமாய்
இயற்கையின் அழிவுகள்
ஈட்டிய கொடுமைகள்
இன்னொரு புறமாய்
ஏட்டிக்குப் போட்டியாய்
காட்டிய விளைவுகள்
இன்னும் மறையாமல்
கண்களில் நிற்கவே
இன்னும் அமைதியை
காணவும் இல்லையே



எங்கும் எதிலுமே பேதங்கள்
மொழியினைக் காட்டிய பேதங்கள்
மதங்களைச் சாடிய பேதங்கள்
இடங்களைச் சாடும்
பேதங்கள் இவை
மனிதங்கள் மறைவதைக்
காட்டியே நிற்கின்றதே

ஆணவம் கர்வம்
அடக்குமுறைகள் இவைகள்
வேண்டாத மண்ணாக மாறி
நீதி நியாயம் அன்பிவைகள்
நிலைகொள்ளச் செய்கின்ற
போது மண்ணில்
புதிதான நறுமணம்
தோன்றி எங்குமே
புதுவாழ்வு புலர்ந்திடும்
என்பதனால்
அதுவே நமைக்காண
நாம் வேண்டி நிற்போம்

## திருவிவிலிய புதிர் போட்டி எண் – 32

## விடைகள்

### 1குறிப்பேடு 01 – 15 அதிகாரங்கள்

01. 150 பேர் (08:40)
02. பெலிஸ்தியர் (10:01)
03. குருக்களும் லேவியரும் (15:14)
04. 44, 760 பேர் (05:18)
05. 6,800 பேர் (12:24)
06. இஸ்ரயேலர் ~ தாவீதிடம் (11:01)
07. செக்கரியா ~ மெசல்லேமிலா (09:21)
08. பேரேட்சு உசா (13:11)
09. கிபயோன் தொடங்கி கெசேர் வரை (14:16)
10. 33 ஆண்டுகள் (03:04)



பங்குபற்றியவர்கள் : 82 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் : 03 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/-
எஸ். ராகுல்
இல : 20,
லூர்த்து ஆலய வீதி,
பாலையூற்று

2ம் பரிசு 300/-
ரி. மிஷேல்
இல : 427,
அன்புவழிபுரம்,
திருகோணமலை

3ம் பரிசு 200/-
வெ. ஆன்டிலக்ஷிக்கா
05ம் வட்டாரம்
கும்புறுப்பிட்டி,
நிலாவெளி


## மறைக்கல்வி சிறப்புப் போட்டி (நீதிமொழிகள்)

## முடிவுகள்



பங்குபற்றியவர்கள் : 10 பேர்
மிகச்ரியாக விடையளித்தேர் : ஒருவர்


பரிசுக்குரியவர் ~ ரூபா 500/-
ச. ஏஞ்சல்
இல : 49, பாலையூற்று
திருகோணமலை




# தூய மாற்கு ஆண்டு

### நற்செய்தியாளர் தூய மாற்கு

பிறப்பு : 01ம் நூற்றாண்டு (கி.பி) காப்டிக் மரபுப்படி ஆபிரிக்காவில் உள்ள இலிபியாவில்
இறப்பு : தகவல் இல்லை
ஏற்கும் சமயம் : காப்டிக் மரபுவழித் திருச்சபை, கிழக்கு மரபு வழித்திருச்சபை, கத்தோலிக்கத் திருச்சபை, லூதரனியம்
முக்கிய திருத்தலங்கள் : St Mark's Coptic, Orthodox Cathefral (கெய்ரா, எகிப்து), St Mark's Coptic, Orthodox Cathefral (அலெக்சார்திரியா, எகிப்து)
திருவிழா : ஏப்ரல் 05
சித்தரிக்கப்படும் வகை : பாலைவனத்தில் சிங்கம், சிங்கங்கள் சூழ்ந்த அரியணையில் ஆயர் உடையில் வெனிசு நகரின் மாலுமிகளைக் காப்பது போல "Paxtib Marce" என்னும் எழுத்துக்களைத் தாங்கிய புத்தகத்தோடு இரு இறக்கைகள் உடைய சிங்கம்.
பாதுகாவல் : பார் அட் லா, வெனிசு,எகிப்து மற்றும் பல






நற்செய்தியாளரான தூய மாற்கு என்பவர் பாரம்பரியப்படி மாற்கு நற்செய்தியின் ஆசிரியராகக் கருதப்படுபவர் ஆவார். மேலும் இவர் இயேசுவின் எழுபது சீடர்களுள் ஒருவராகவும், கிறிஸ்தவத்தின் மிகப்பழமையான நான்கு ஆயர்பீடங்களுள் ஒன்றான அலெக்சாந்திரியா திருச்சபையின் நிறுவனராகவும் கருதப்படுகிறார்.

வரலாற்றாசிரியரான யுசிபசின்படி மாற்கு அனனியாசு என்பவருக்குப் பின்பு, நீரோ மன்னனின் ஆட்சியின் எட்டாம் ஆண்டில் அலெக்சாந்திரியாவின் ஆயரா~னார். பாரம்பரியப்படி கி.பி. 68இல் இவர் மறைசாட்சியாக மரித்தார் என கூறப்படுகின்றது.

மாற்கு நற்செய்தி 14 : 51 ~ 52 இல் கெத்சமெகித் தோட்டத்தில் இயேசு கைது செய்யப்பட்ட பின்பு அவர் பின்னே சென்ற இளைஞன் அவர் என்பது மரபு. இயேசுவைக் கைது செய்தவர்கள் இவரைப் பிடித்த போது தம் வெறும் உடம்பின் மீது இருந்த நார்ப்பட்டுத் துணியை விட்ட விட்டு இவர் ஆடையின்றி தப்பியோடினார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் பொது நாட்காட்டியில் இவரின் விழா ஏப்ரல் 25இல் கொண்டாடப்படுகின்றது. இவரை பொதுவாக இரண்டு இறக்கைகளை உடைய சிங்கத்தைக் கொண்ட கலைகளில் சித்தரிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஜோசேப் வாஸ் திருவிழா வேதத்தீவு

**தூய அந்தோனியார ஆலயம் மூதூர்.**

தூய யோசேப் வாஸ் அடிகளாரின் திருவிழாவை முன்னிட்டு மறைமாவட்ட அளவிலான திருவிழாக் கொண்டாட்டம் வேதத்தீவில் சென்ற 16ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நமது மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் திருவிழா ஆடம்பரக் கூட்டுத்திருப்பலி மாலை 4.00 மணிக்கு வேதத்தீவில் ஆலயம் கட்டப்படும் இடத்தில் நிறைவேற்றப்பட்டது.

மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலுமிருந்தும் மக்கள் திரளாக வேதத்தீவில் கூடியிருந்து இவ்விழாவைச் சிறப்பித்தனர். அவர்களோடு எம் மறைமாவட்ட குருக்கள் மற்றும் துறவற குருக்கள் கன்னியரோடு இந்த விழா சிறப்பாக நடைபெற்றது. திருமலைத்தீபத்தில் வெளியான தூய யோசேப் வாஸ் சிறப்புப்போட்டிக்கான பரிசில்களும் ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இருதயபுரம், மூதூர் இறைமக்கள் இதனை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இலங்கை கடற்படை, மக்கள் சிரமமில்லாமல் ஆற்றைக் கடப்பதற்கு படகு ஏற்பாடுகள் செய்து உதவினர். பிற்பகல் 2.00 மணியிலிருந்தே மக்கள் தீவில் கூட ஆரம்பித்தனர். அனைத்து வழிபாடுகள் கொண்டாட்டங்கள் முடிந்து ஏறத்தாழ 7.00 மணியளவில் தீவிலிருந்து மக்கள் வெளியேறினர். அனைவரும் புனிதரின் செயல்களைவியந்து போற்றி வண்ணம் வீடு திரும்பினர். தொடர்ந்து புனிதரின் ஆலயம் சிறப்பாக கட்டி எழுப்பப்பட ஊக்கமும் ஆக்கமும் தந்து ஒத்துழைப்போம்.

நன்றி

தகவல் : அருட்தந்தை அலெக்ஸ் செல்லையா OFM. Cap

புகைப்படம் 12ம் பக்கத்தில்......

# கிறீஸ்தவர்கள் வாழ்ந்த இடம்

❖ தூய யோசேப் வாஸ் அடிகளாரின்

❖ கால்பதித்த பூமி. பெயரில் ஒரு திருத்தம்

❖ (VEDA THIVU) வேடத்தீவு இப்படியல்ல!

❖ (VETHA THIVU ) வேதத்தீவு இதுவே சரி

❖ கிறீஸ்தவர்கள் வாழ்ந்த இடம்

❖ என்பதை அடையாளம் காட்டிய

❖ தீவே வேதத்தீவென்பதை

❖ உறுதிப்படுத்திக் கொள்வோம்.

- ஆசிரியர்

# கிறிஸ்மஸ் பகிர்வுக் கொண்டாட்டம்

தூய அந்தோனியார் ஆலயம், மூதூர்

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக எம் பங்கின் இளைஞர்கள், கிறிஸ்மஸ் பகிர்தல் விழாவை, எம்பங்கின் சகாயபுரம் பகுதியில் உள்ள பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த ஏழை மக்களுடன் கொண்டாடியது மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

கடந்த டிசெம்பர் மாதம் 29ம் திகதி மாலை 4 மணியளவில் சகாயபுரம், பிள்ளையார் கோவில் தெரு மிகவும் கோலாகலமாகக் காணப்பட்டது.

சகாயபுரத்தைச் சேர்ந்த கத்தோலிக்க சகோதர சகோதரிகளோடு எம் பங்கைச் சேர்ந்த 15 இளைஞர்கள், பங்குத்தந்தை, உதவிப்பங்குத்தந்தை, அருட்சகோதரிகள். மறைக்கல்வி மாணவர்கள் இப்பகுதியைச் சேர்ந்த குடும்பங் களை அங்குள்ள பிள்ளையார் கோவிலில் சந்தித்து அவர்களோடு கிறிஸ்மஸ் கீதங்கள் ஜெபங்களோடு கிறிஸ்மஸ் கெண்டாட்டத்தைத் துவங்கினர். அங்குள்ள குடும்பங்களில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணமாக அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களையும் உடுப்புக்களையும் மரக்கறி உணவுகளையும் கொடுத்தனர். அந்தப் பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு கல்வியை ஊக்குவிக்கும் வண்ணமாக பாடசாலை கொப்பிகளையும் வழங்கினர். மூதூர் பகுதியிலிருந்து கத்தோலிக்கர்கள் இவ்வாறான சமூக சேவைகளைச் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனை இப்பகுதி மக்கள் மிகவும் நன்றியோடு நினைவுகூர்ந்து பாராட்டினர்.

நன்றி!

தகவல் : அருட்தந்தை அலெக்ஸ் செல்லையா OFM. Cap

புகைப்படம் 12ம் பக்கத்தில்......

# இளையோர் திறன் உயர ....

சென்ற இதழ் தொடர்ச்சி

கலீல் ஜிப்ரான் இப்படிப் பேசுகிறார்: 'ஒரு அடிமை தூங்கிக் கொண்டிருந்தால் அவனை எழுப்பாதீர்கள்: பாவம் அவன் தன் சுதந்திரக் கனவுகளைக் காணட்டும் என்று சொல்கிறார்கள்: நான் சொல்கிறேன் தூங்கும் அடிமையை எழுப்பிவிட்டுச் சுதந்திரம் பற்றி விளக்கிச் சொல்லுங்கள்.' இளையோர் இப்படி எழுப்பப்பட வேண்டிய கட்டாயத்திற்குள் தான் நிற்கிறார்கள். தங்களுடைய கள, தலைமை, தத்துவார்த்த எதிரியைச் சரியாக அடையாளம் கண்டு விலாங்குமீனாய் உருவிக் கொண்டு வெளிவரப் பழக வேண்டும்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது எதிர்காலத்தைத் திட்டமிடுவது மட்டுமல்ல. இறந்த காலக் காயங்களின் காரணங்களையும், நிகழ்காலப் போராட்டங்களையும் வேருடன் விசாரணை நடாத்தி இளைஞர்களின் தலைமையோடு திட்டமிடுதலே ஆகும். அதற்காக இளையோரைத் தேடுவோம்! கிடைத்தவர்களைக் கொண்டு எஞ்சியோரை அடையாளம் காண்போம்! ஒட்டுமொத்த இளையோரும் ஒரு புள்ளியில் இணையும் போது அங்கு எழுதுவோம் மனிதத்தின் உயர்வில் எதிர்கால இலக்குகளை! அந்தப் புள்ளியை நோக்கி வேகத்தோடு, விவேகத்தோடு, வீரியத்தோடு நடைபோடுவோம் நம் இதயம் இயங்கும்வரை.........!

## 06.உயர்வின் மதிப்பு

ஒரு பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மாணவரும் தத்தம் மேசைகளுக்கருகில் நின்றுகொண்டிருந்தனர். ஒரு மேசை மேல் மூன்று பெட்டிகள் இருந்தன. முதல் பெட்டி மேல் 'இதற்கு கொடுக்கில் விஷம்' என்று எழுதப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்த்தால் அதற்குள் ஒரு தேள் இருந்தது. இரண்டாவது பெட்டியின் மேல் 'இதற்குப் பல்லில் விஷம்' என்று எழதப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு பாம்பு இருந்தது. **மூன்றாவது பெட்டியில் இதற்கு உடம்பெல்லாம் விஷம்' என்று எழதப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்த்தால் அதற்குள் ஒரு கண்ணாடி இருந்தது. திறந்து பார்ப்பவரின் முகம் இருந்தது. இது மனிதனைப் பற்றி மனிதன் தந்த மதிப்பீடு கொடுக்கோ பல்லோ நீக்கப்பட்டால் விஷம் இல்லாமல் போகும் விலங்குக்கு! மனிதனுக்கு?**

மனம் பக்குவப்பட்டு, சுயஉணர்வோடு சுயநலமற்ற உயர்வு நோக்கில் மதிப்பிடும் போது நமக்குள்ளே இருக்கும் விஷம் இல்லாமல் போகும். மனதிற்குள் நுழையும் ஒவ்வொரு சிந்தனையையும் நமக்குள் இருக்க அனுமதிப்பது மட்டுமே நமது பொறுப்பு. மனப்பக்குவம் என்பது வெறும் திட்டத்தோடு முடிவதில்லை திட்டங்களைத் தீட்டிக் குவிப்பதில் பலன் ஒன்றும் இல்லை. செயலில் இறங்குதலே உண்மையான வெற்றிக்கு வழியாகும்.

மனம் என்பதோடு சம்மந்தப்பட்டதே மனிதம். மனம், மனிதம், மனிதன் இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்படைய கட்டமைப்பில் மனிதத்தன்மையுடைய மனிதர்களாக மாறுவது நம் கடமை.

**'எவன் மனிதன்?' என்ற கேள்விக்குப் பெரியார் பதில் சொல்லுகிறார். இப்படியாக! 'பணம் வைத்திருப்பவன் மனிதன் என்றால் ரிசர்வ் பேங்க் தான் மனிதன். படித்தவன் மனிதன் என்றால் நூல் நிலையம் தான் மனிதன். அறிவாளி தான் மனிதன் என்றால் கலைக்களஞ்சியம் தான் மனிதன்.** இதையே தவத்திரு குன்றக்குடி அடிகளார் இப்படிச் சொன்னார். 'காலால் நடப்பவை கால்நடைகள்: மனிதனும் காலால் தானே நடக்கிறான்? காலால் மட்டும் நடப்பவை கால்நடை. மனதாலும் நடப்பவனே மனிதன். மனிதனுக்கான உயர்வின் மதிப்பு மனமே ஆகும்.

மனதால் நடப்பது என்பது சமூகத்தோடு சம்பந்தப்பட்டது. இன்பம், துன்பம், இரக்கம், அரசியல், கலாச்சாரம், ஏற்றதாழ்வு, பண்பாடு, பணம், மோதல், அடக்கம், உரிமை, போராட்டம், விட்டுக்கொடுத்தல், வாழ்வளித்தல் என்று நீண்டதொரு பட்டியலை மனதின் துணையில் சந்திக்க வேண்டியுள்ளது. விட்டுக் கொடுத்தல், அடுத்தவரை அவரின் தன்மையோடு ஏற்றுக் கொள்ளுதல் மனத்தின் அடிப்படைத் தேவையாகின்றன.

நூறு சதவீதம் எல்லாம் சரியாக அமைந்துவிட்டால் வாழ்க்கை இனிக்காது. சரிவுகளில்தான் அனுபவங்களைப் பெறமுடியும். உராய்வுகளில்தான் பிடிமானம் கிடைக்கும். அந்த உணர்வைப் பெற்று மனதை ஆளுகின்ற திறனைக் கைக்கொள்வோம்! அந்தத் திறன் பலத்தைக் கொடுக்கும். அந்தப் பலத்தில் **முழுமையான வெற்றிகளைப் பெறுவோம், நம் இதயம் இயங்கும் வரை......!**

## 07. மதிப்பின் சவால்

ஒரு நாள் இருபதாம் நூற்றாண்டு நகரத்தை ஒருவர் தோண்டினார். இந்தக் கண்டுபிடிப்போடு ஆய்வு முடிந்தது. இதோ ஒரு வேடிக்கையான அறிவிப்பு. ' இந்த தண்ணீர்க்குழாய் எல்லாச் சாதியினருக்கும், எல்லா மதத்தினருக்கும் பொதுவானது!. இதற்கு என்ன பொருள் இருக்க முடியும்? இந்தச் சமுதாயம் பிளவுபட்டிருந்தது என்பதா? ஒரு சிலர் உயர்வாகவும், மற்றவர்கள் தாழ்வாகவும் இருந்தார்கள் என்பதா? இப்படியானால் இந்த நகரம் புதைந்து போகும் அளவுக்குத் தகுதியைப் பெற்றிருக்கிறது. இதை ஏன் எந்திரகாலம் என்று அழைத்தார்கள். இருபதாம் நூற்றாண்டு ஒரு கற்காலம் போன்றல்லவா தோன்றுகின்றது' ! மேற்கண்ட வரிகள் தயாபவார் என்ற அறிஞரின் சிந்தனையாகும்.

மேலோட்டமாக படிக்கிற போது ஒருவித நகைச்சுவை போர்த்தப்பட்டு இருப்பதாகத் தோன்றினாலும் இதன் பொருள் அதீத ஆழமானது. அறிவியல் யுகமாய், எந்திரயுகமாய் அடையாளப்படுத்தப்பட்ட இந்தக் காலத்தின் மீதான மதிப்பு சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. சாதி. இனம், மொழி..... என்றெல்லாம் சிதைந்து கிடக்கின்ற இந்தக் காலம் ஒரு நாட்டின் அதிபரைக் கைது செய்து இன்னொரு நாடு தூக்கில் போட்டு வெற்றி முரசு கொட்டும் காலம்: எல்லாத்துறையிலும் இலஞ்சமே கூடு கட்டி வாழும் காலம். மனித உயிரும் உரிமைகளும் மலிவாக மதிக்கப்படுகின்ற இந்தக்காலம் அநாகரீக காலம் என்று வரும் காலத்தில் அழைக்கப்படுமானால் அது தவறாக அழைப்பாகாது.

மனிதத்தை உயரத் தூக்கிப்பிடிக்கும் மதிப்பும் அதற்காய் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திக்கும் மனத்திடமுமே இளையோர் உள்ளக்கிடக்கையில் உதித்தெழ வேண்டிய உணர்வாகும். கருப்புப் புள்ளிகளால் பூசி மெழுகப்பட்ட சமூகத்தில் இளையோர்களால் வைக்கப்படும் வெள்ளைப்புள்ளி போற்றுதலுக்குரியதே ஆகும்.......



தொடரும்...................

நன்றி ~ விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியம்

## அன்பியக் கூட்டம் நடத்தும் முறை

01. இறைவனின் பிரசன்னத்தையும் உடனிருப்பையும் உணர்தல்.





02. விவிலியத்தை வாசித்தல்

03. உள்ளத்தை, மனதை, நெஞ்சத்தைத் தொட்ட இறைவார்த்தையைப் பிறரோடு பகிர்தல்.



04.இறைவனின் குரலுக்குச் செவிமடுத்தல்



05. இறைவார்த்தைப் பகிர்வு



06. செயல்திட்டம்



07. எல்லோரும் இணைந்து செபித்தல்



நன்றி - தோழன்



# தூய மாற்கு




# மாற்கு நற்செய்தி ஓர் அறிமுகம்

**முன்னுரை :**

புதிய ஏற்பாட்டில் உள்ள நான்கு நற்செய்திகளில் மிகச்சிறியது மாற்கு நற்செய்தி. இதில் மொத்தம் 677 வசனங்களே உள்ளன. இந்நற்செய்திக்கு விளக்கவுரை எழுதியவர்களும் மிகச்சிலரே. கடந்த நூற்றாண்டு வரை இந்நற்செய்தியை மூன்றாவது நற்செய்தியாகத் தான் நினைத்தனர் (மத்தேயு ~ லூக்கா ~ மாற்கு ~ யோவான்). இளம் திருச்சபை காலம் முதல் அலெக்சாந்திரியா கிளமெண்ட் (150 ~215), செசரியாவைச் சேர்ந்த எசூபியஸ் (260 ~ 340) மற்றும் பலர், மாற்கு நற்செய்தியை இயேசுவின் மூதாதையர் பட்டியல் நற்செய்திகளுக்குப் பிறகே (மத்தேயு ~ லூக்கா) வரிசைப்படுத்தினர். பல நூற்றாண்டுகளாக இந்த எண்ணமே மேலோங்கி இருந்தது. போன நூற்றாண்டில் தோன்றிய 'புதிய திறனாய்வு' முறையால் மேற்சொன்ன வரிசை மாற்றப்பட்டது. மாற்கு நற்செய்தி தான் முதன் முதலில் எழுதப்பட்டது என்பதும் எண்பிக்கப்பட்டது. கடுகு சிறித்தாலும் காரம் குறையாத இந்த மாற்கு நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டே மத்தேயுவும், லூக்காவும் தங்கள் நற்செய்தியை அமைத்தனர் என்பதும் தெளிவாகிறது.

**ஆசிரியர் - மாற்கு**

இந்நற்செய்தியின் ஆசிரியர் தனது பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. ஆசிரியரைப் பற்றி அகச்சான்றும் இல்லை.

ஒத்தமை நற்செய்திகளில் உள்ள இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்கள் பட்டியலிலும் (மத் 10:14, லூக் 6:12~16, மாற் 3: 13~19) மாற்கின் பெயர் இடம்பெறவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் மற்ற பல இடங்களில் 'மாற்கு' என்ற பெயர் வருவதைக் காணலாம். திப 12:12,25, 15:37,39, கொலோ 4:10, 2திமோ 4:11, பிலோ 24:1, பேது 5:13. ஆக புதிய ஏற்பாடு தரும் இந்த மாற்கு என்பவர் யார்? இதன் விளக்கத்தைப் புறச்சான்றுகளை வைத்தே கண்டுபிடிக்க முடியும். இப்புறச்சான்றுகளே இளம் திருச்சபை, அன்று இந்நற்செய்தியின் ஆசிரியரைப் பற்றிக் கொண்டிருந்த பாரம்பரியம்.

**புறச்சான்று**

திருச்சபையின் தலைவர் பேதுருவின் சீடராகப் பணியாற்றியவர்தான் மாற்கு. இவரின் தாய் பெயர் மரியா. இவர்களுடைய வீட்டில் தொடக்க காலக்கிறிஸ்தவர்கள் கூடி வழிபட்டு வந்தனர் (திப 12:12). இவர் யோவான் மாற்கு என்றும் அழைக்கப்பட்டார்.

கொலோ 4:10 இவர்(மாற்கு) பர்னபாவின் நெருங்கிய உறவினர் என்று கூறப்பட்டுள்ளது.

திப 12:25: எருசலேமிலிருந்து
பர்னபா பவுலுடன் திரும்பும் போது அவர்களுடன் மாற்கு இருந்தார்.

திப 12:37 மாற்கையும் தங்களுடன் தூதுரைப்பயணங்களில் அழைத்துச் செல்ல பர்னபா விருப்பம் தெரிவித்ததைக் காணுகின்றோம்.

பிலோ 24லிலும் 2திமோ 4:1 லிலும் இதே மாற்கு பவுலின் உடன் ஊழியராக இருப்பதைக் காணுகிறோம்.

1பேதுரு 5:13இல் 'என் மகன் மாற்கு' என்று பேதுரு கூறுகிறார். எருசலேம் தாய்த்திருச்சபையில் பேதுருவுடன் சிறிது காலம் பணிபுரிந்தவர்கள்தான் இந்த மாற்கு.

ஆரம்ப நாட்களில் தூரைப் பயணங்களின் சிரமங்களை தாக்குப்பிடிக்க முடியாமல் தளர்ந்து போனவர்தான் இந்த இளைஞன். பவுலுடைய வாழ்வின் இறுதிக்கட்டத்தில் உரோமையில் அவருக்க உறுதுணையாக இருந்தவரும் இவரே (2 திமோ 4:11)

**இறுதியாக பாரம்பரியம் கூறும் சில வரிகள்**

'விசுவாசிகள் வேண்டுதலுக்கிணங்கி, பேதுருவின் சீடரும் விளக்குநருமான மாற்கு எழுதிய நூல் இது' என்கிறார்கள் தொடக்க கால திருச்சபை தந்தையர்கள் (150 ~ 230).

ஆரம்ப கால கிரேக்கச் சுவடிகளும் 'மாற்கு வழிவந்த நற்செய்தி ' என்றே கூறுகின்றன.

பேதுரு பவுல் இவர்களின் இறப்பிற்குப் பின் மாற்கு வேறெங்கும் செல்லாமல் உரொமையில் தங்கி அங்கு பணியாற்றியதாகவும் மரபு கூறுகிறது. தொடரும்.................

சென்ற இதழின் தொடர்ச்சி....

# விவிலியத்தில் குடும்பம்

இறைவன் விதித்ததையே கேள்விக்குரியதாக எண்ணுகிறாள். பழத்தைப் பறிக்கிறாள். தான் மட்டும் உண்ணாது, தன் கணவனுக்கும் கொடுக்கிறாள். அவனும் உண்கிறான். ஆகக் குடும்பமாக இறைக் கட்டளையை மீறுகின்றனர். (தொநூ 3:6)

விளைவு யாது? முதற்கண் தாம் ஆடையின்றி இருப்பதை அறிகின்றனர். வெட்கமும் கூச்சமும் மேலிட, இலைகளைத் தைத்துத் தங்கள் மானத்தை மறைக்க முயல்கின்றனர். (தொநூ 3:7)! அதாவது அதுவரை தம்மளவில், தமக்குள் இருந்த ஒத்திசைவு முறிவுபட்டு, நடுக்கமும் அச்சமும் உற்றவராகும் மாற்றம் (தொநூ 3:10)!

அடுத்து, இதுவரை கடவுளின் திருமுன் வாழ்ந்து வந்த அந்தக் குடும்பம். 'அவரது திருமுன்னிலிருந்து விலகிக் கொள்கின்றனர் (தொநூ 3:8). அதுவும் வழக்கம்போல் இறைவன் அவர்களோடு உலவ வருகிற ஓசையைக் கேட்டதுமே, ஓடி ஒழிந்து கொள்கிற அளவுக்கு அவர்மேல் அதுவரை இருந்த ஒத்திசைவு உறவு முறிந்து விட்டது என்பதை அறிகிறோம்.

அது மட்டும் அல்ல: 'அவர்களுக்கிடையே இருந்த நல்லுறவும் முறிந்துவிட்டது என்பது உண்மை! ஆகவேதான் தன் வாழ்க்கைத் துணைவியையே தனது பாவத்திற்குப் பலிகடாவாக ஆக்கத் துணிகிறான் ஆதாம். குடும்பத்தை தொடங்குவதற்கு முன் 'எலும்பின் எலும்பே, தசையின் தசையே எனக் காதல் கவிதை பாடியவன் இன்று 'என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண்தான் அந்தக் கனியைக் கொடுத்தாள்' என்று குறை கூறுகிறான். அவ்வாறே, ஏவாளும் தான் செய்த தவறை உணர்ந்தாளில்லை. மாறாகக் கடவுள் படைத்த 'பாம்பு தான் தன்னை ஏமாற்றியது' என்று பழியை மற்றொரு படைப்பின் மீது போட்டுத் தப்பிக்கப் பார்க்கிறாள்.

இறுதியில், இயற்கை அன்னையிடமிருந்து ஒத்திசைவும் சீர் கெட்டது. அன்று வரை அவர்களுக்கு எந்த துன்பத்தையும் தராத இயற்கை இனி அவர்களுக்குத் தொல்லைகளைத் தருகின்ற ஊற்றாக மாறிவிட்டது. 'முட்செடிகளையும் முட்புதரையும் முளைப்பிக்கும் குணத்தைப் பெறுகிறது.

## அந்த இன்ப வனமா இன்று துன்ப மயம்?



சுருங்கக்கூறின் குழுக்குழுக் குடும்பமாக வாழ வேண்டியவர்கள் இப்போது நான்கு வகையான ஒத்திசைவுக்கேட்டைச் சந்திக்க நேரிடுகிறது.

(1) இறை உறவு முறிவு

(2) தமக்குள் தழைத்தோங்க வேண்டிய ஒத்திசைவுக்கேடு ~ மனதுக்குள் வெட்கம் அச்சம்,

(3) அவர்களுக்கிடையே உள்ள உறவு முறிவு ~ ஒருவரை ஒருவர் குறை கூறும் போக்கு,

(4) இயற்கையுடன் இயங்க வேண்டிய ஒத்திசைவுக் கேடு:

இந்த நான்கு வகைச் சீர்கேடுகள் அனைத்துத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மூலகாரணமாய் அமைந்துவிட்டன. இனி, ஆதாம் வருந்தி உழைக்கத்தான் வேண்டும். ஏவாளோ மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக அனுபவிக்கத்தான் வேண்டும் (தொநூ 3: 16~17). இயற்கையோ சீற்றமுடன் செயல்படத்தான் வேண்டும். நிலம் சபிக்கப்பட்டு மிதிக்கப்பட்ட நிலையை அடைந்து விட்டதே மனிதனின் பாவத்தினால் தானே (தொநூ 3:17).

மானுடத்து முதல் குடும்பம் என்று, இறைவனை முன்னிருத்தாது அவர்தம் திருவுளத்திற்குக் கீழ்ப்படிய மறுத்துத் தன் இச்சைக்கு முன்னுரிமை கொடுக்கத் துணிந்ததோ, அன்றுதான் அவர்களது இன்பம் தரும் தேன்நிலவுத் தோட்டமும் தடம் புரண்டது. தனி மனித வாழ்வில் அமைதி குலைந்தது. வெட்கம், அச்சம், கோபம் அனைத்துக் குறைபாடுகளும் தோன்றின. தம்பதியருக்கிடையே உறவில் விரிசல், இயற்கையிலே குழப்பம், இன்ப வனத்திலிருந்தே நீக்கம்! எல்லாமே துன்ப மயம்!

தொடரும் .............

நன்றி ~ விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை அனுபவத்தின் ஓர் இனிய அழைப்பு

**கிறிஸ்டி முருகுப்பிள்ளை**

தொடர்ச்சியாக ஆறு நாட்கள் இறை அனுபவத்தில் திளைத்த எங்களுக்கு பெங்களூரின் சூழல் தெரியவில்லை. அன்று மாலை 5.00 மணிக்கு நடுநிலையத்தை விட்டு அலோசியஸ், அடைக்கலதாஸ், சகாயராஜ் ஆகியோருடன் ஒரு நடைநடந்து ஒரு பெட்டிக் கடையில் ரீ குடித்து பலதும் பத்தும் பேசிக் கொண்டோம். ஒவ்வொருவரும் உயர்பதவிகளை வகித்த வர்கள், தற்போதும் பதவியில் இருப்பவர்கள். இலங்கையின் தற்போது நிலைமைகளை கேட்டறிந்து கொண்டனர். முடியுமானவரை இந்தியத் தமிழில் விளக்கினேன்.

அன்றிரவு பங்கு பற்றுனர்களினால் இரு நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. ஒரு குறுகிய நேர இடைவெளியில் சிறப்பாக ஆற்றுகைப்படுத்தினர். எமது ஜெயமணி, ஆன் றொஸ்ரீனா ஆகியோரும் தமது பங்களிப்பை நல்கினர்.

திரு.போஸ் அவர்கள் மாலை வருகைதந்து நாளை நாங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டிய நேரத்தை ஞாபகப்படுத்திச் சென்றார். மறுநாள் கருத்தரங்கு நடைபெற்ற போது எதிர்காலத்தில் நாங்கள் எடுக்க வேண்டிய செயற்திட்டங்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டன. தமிழ் நாட்டில் “கிறிஸ்தவ மறுமலர்ச்சி இயக்கம்” ஒவ்வொரு பங்கிலும் சிறப்பாக இயங்கி வருகின்றது. அதன் பிரதிநிதிகளே கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர். அவ் வியக்கம் ஆயர்களின் நேரடி இணைப்பின் கீழ் இயங்குகின்றன. பங்குத்தந்தையர்களுக்கு நேரடித் தொடர்பில்லாமல் அவை இயங்கி வருகின்றன. அவற்றின் செயற்பாடுகளில் சில

1. 2ம் வத்திகான் சங்க ஏட்டின் படி பொது நிலையினரின் பங்கை வலியுறுத்துவது
2. பங்கின் வளர்ச்சிக்காக உதவுவது.
3. ஏனைய மத மக்களிடையே சக வாழ்வை ஊக்குவிப்பதோடு ஏற்றுக் கொள்ளத்தக்க நம்பிக்கையாளர்களாக மாறுவது.
4. கிறிஸ்து இயேசுவைப் பற்றிய செய்திகளை ஏனைய மதமக்களிடையே பரப்புவது.

மதிய உணவின் பின் நன்றி நவிலல் நிகழ்வு இடம் பெற்றது. இலங்கை சார்பாக என்னால் ஒரு கவிதை வாசித்து காட்டப்பட்டது. ஆன்றொஸ்டினாவும் தனது நன்றியுரையை நிகழ்த்தினர். 3மணியளவில் ஆழ அகலக்கரத்தரங்கு நிறைவுக்கு வந்தது. சரியாக 3.00க்கு காருடன் திரு.போஸ் அவர்கள் வந்து விட்டார். அவர் எங்களை பெங்களூர் நகரமெங்கும் சுற்றிக் காட்டினார். பெங்களூர் சட்டசபை உயர் நீதி மன்றம் குழந்தை யேசு ஆலயம், சதாசகாய மாதா ஆலயம், நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள 30 ஏக்கர் பரப்பளவுள்ள பூங்கா போன்ற பல இடங்களைச் சுற்றிக்காட்டினார். அவரின் வீட்டுக்கும் சென்று தேனீர் விருந்துபசாரத்தை பெற்றுக்கொண்டோம். அழகான நகரம்... பிரமிப்பான கட்டிடங்கள்... கடைத் தெருவுக்கும் அழைத்துச் சென்று பங்களூரு ஞாபகார்த்தமாக சில பொருட்களை வாங்கிக் கொள்ள வழிப்படுத்தினார். அத்தோடு சென்னை ரீ நகரில் நீங்கள் கொள்வனவு செய்ய வேண்டியவை அதிகம் உள்ளது என்றும் குறிப்பிட்டுக் கொண்டார்.

சரியாக 10 மணிக்கு பெங்களூரிலிருந்து அன்னை வேளாங்கண்ணிக்கு செல்வதற்கான சொகுசு பஸ்ஸில் ஏற்றிவிட்டார். ஏறக்குறைய 450 கிலோ மீற்றர் தூரத்தைக்கடப்பதற்கு படுக்கை வசதி கொண்ட பஸ்ஸை ஏற்பாடு செய்திருந்தார். மெத்தை பெட்சீற் தலையணை வசதிகளுடன் அந்த பஸ் அமைந்திருந்தது. நானும் பாக்கிய நாதனும் ஒரு கட்டிலிலும் ஜெயமணியும் ஆன்றொஸ்ரீனாவும் மற்றொரு கட்டிலிலும் ஏறிக்கொண்டோம். ஏறக்குறைய 11 மணித்தியாலப் பிரயாணம். மறு நாள் சரியாக 10 மணிக்கு வேளாங்கண்ணியை அடைந்தோம். அங்கு எங்களுக்காக ஏற்பாடு செய்யபட்ட KPN ஹோட்டலில் றூமைப் பெற்றுக் கொண்டோம். குளித்து உடை மாற்றிக்கொண்டு காலை உணவை ஹோட்டலிலேயே சாப்பிட்டுவிட்டு ஆட்டோவில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தை அடைந்தோம், பொதுவாகவே தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்கள் பிரமாண்டமானவை. அந்த பிரமாண்டங்களின் உச்சமாக அன்னையின் ஆலயமும் சுற்ற வர இருந்த ஏராளமான ஆலயங்களும் எம்மைப் பிரமிக்க வைத்தன. எங்களுக்குக்கிடைத்த ஒரு பகல் பொழுது உரியமுறையில் தரிசிக்க போதாத நிலையிலும் நேரத்தை உச்சளவில் பயன்படுத்திக்கொண்டோம். பகலுணவை வெளிக்கடையிலும் இரவுணவை நாம் தங்கியிருந்த ஹோட்டலிலும் பெற்றுக்கொண்டோம்.

மீண்டும் இரவு 10.30 மணிக்கு வேளாங்கண்ணியிலிருந்து சென்னை நோக்கிப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. SRS சொகுசு பஸ்ஸில் எமக்காக சீற்றுக்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தது. சுமார் 320 கிலோ மீற்றர் தூரத்தை பயணித்து காலை 6.00 மணிக்கெல்லாம் கோயம்பேடு பேருந்து நிலையத்தை வந்தடைந்தோம். அங்கு எங்களை பொறுப்பேற்க வேண்டியவர் திரு டேவிட். அவரை எங்களுக்குமுன்பின் தெரியாது. எங்களை அவருக்கும் தெரியாது. பஸ் இறக்கி விட்ட இடத்தில் நால்வரும் நின்று அவருடன் போனில் தொடர்பு கொண்டோம். அவரும் அந்தப் பகுதியில் தான் நிற்பதாகக் கூறினார். நான்கைந்து தடவை எம்மை கடந்து சென்றாலும் எம்மை அடை யாளம் காணவில்லை. ஐந்தாவது தடவை “நீங்க ஸ்ரீலங்காவா...” என்று தயங்கிய படியே கேட்டார். இத்தனைக்கும் ஏழு மணியாகி விட்டது. நிம்மதி பெருமூச்சுடன் “ஆமா சார்” என்றோம் உற்சாகமாக. திரு டேவிட் தனது மகளுடன் இரு கார்களில் வந்திருந்தார். தமிழ் பேச சற்று சிரமப்பட்ட அவர் மகள் ஜூலி ஆங்கிலத்தில் சரளமாக உரையாடினார். 9ம் தரத்தில் கல்விகற்கிறார். ஒரே ஒரு மகள் செல்லப்பிள்ளை.

பாண்டி பஸாரில் உள்ள “சரவணா லொட்ஜ்” இல் எமது தங்குமிடத்தை டேவிட் ஒழுங்கு செய்திருந்தார். பக்கத்திலுள்ள பிராமணாள் ஹொட்டலில் வாழையிலையில் காலை உணவை முடித்துக் கொண்டு எங்களை ரீ நகரிலுள்ள கடைத்தெருவுக்குச் செல்வங்கள் என்று கூறி நாளை சந்திப்போம் என்று கூறிச் சென்றுவிட்டார். காலை 10 மணிக்கெல்லாம் எங்களுக்கு உதவுவதற்காக கலாநிதி ஜாண் பொஸ்கோ அவர்களும் அவரது மனைவியும் ஆட்டோவில் வந்து சேர்ந்தனர். பொடி நடையாக நடந்து சென்றோம். ரீ நகர் தான் அனேகமான புடவை கடைகள் , நகைக்கடைகள் உள்ள தெரு. RMKV டெக்ஸ்டைல், போத்தீஸ், ஜெயசந்திரன், சரவணாஸ் ஸ்டோர்ஸ், சென்னை சில்க்ஸ், ராம் வேட்டிகள், லலிதா ஜூவல்லர்ஸ் போன்ற பல பிரமாண்டமான கடைகள் கண்ணைப் பறித்தன போத்தீஸினுள் தான் சென்றோம். அது ஒரு புடவைகளின் உலகம். எதை வாங்குவது எதைத் தெரிவு செய்வது என்று திக்குமுக்காடிய எங்களை திருமதி பற்றிமா ஜோன் பொஸ்கோ ஒரு திசைப்படுத்தி தெரிவு செய்வதில் பெரிதும் உதவியாக இருந்தார். அனேகமான கொள்வனவுகளை போத்தீஸில் முடித்த பின் ஜெயச்சந்திரனுக்கு சென்ற போது தான் போத்தீசை விட ஜெயச்சந்திரனில் மலிவு என்ற விடயம் புரிந்தது. தொடர்ந்து சரவணா ஸ்டோர்ஸ்க்கு சென்ற போது ஒவ்வொரு மாடியிலும் ஒவ்வொரு ரகமான பொருட்கள்... உடைகள், நகைக்கடை, வீட்டுப் பொருட்கள், உணவகம் என்று பல விடயங்கள்.

இரவு 9 மணிக்கு எங்கள் பேக்குகளை நிரப்பிக்கொண்டு லொட்ஜ் திரும்பினோம். தெரிவு செய்வதற்கு நாட்கள் போதாமலிருந்தது.

மறு நாட்காலை 9 மணிக்கெல்லாம் திரு டேவிட் சந்தித்தார். அருமையான மனிதர் அவ்வாறான வழிகாட்டலையே தனது தொழிலாகக் கொண்டவர். திரு பொஸ் அவர்களின் தம்பி முறை உறவினர்.

முதலில் சாந்தோம் புனித தோமையார் பேராலயம், புனித தோமையார் சிறிய மலை, புனித தோமையார் பெரிய மலை என்று பல ஆலயங்களுக்கு குறுகிய நேரத்தில் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது.

பெரிய மலையில் எங்கள் பகலுணவை முடித்துக் கொண்டோம். இம்மூன்று ஆலயங்களின் வரலாறு எழுதுவதென்றால் மேலும் ஒரு வருடங்களுக்கு எழுத வேண்டும். எனது அனுபவத்தை நேரடியாக நீங்களும் அனுபவிக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பிலும் ஆவலிலும் தான் இதை எழுதி முடிக்கிறேன்.

பி.ப 1.30க்கு எங்களை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கொண்டு எங்களை இறக்கி விட்டு டேவிட் அவர்கள் விடை பெற்றுக் கொண்டார். இலங்கையை நோக்கிய பயணம் பி.ப 4.30க்கு ஆரம்பமாகியது.

உண்மையில் இவ்வாறான இறை அனுபவத்தின் இனிய அழைப்பு எமக்கு கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றிகூறிக் கொண்டவர்களாக அருட்பணி.றொகான் பேர்னாட் அவர்களுக்கும் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு நோயல் இம்மானுவல் ஆண்டகைக்கும் மனமார்ந்த நன்றி கூறிக் கொண்டவர்களாக ஏயார் லங்கா விமானத்தில் ஏறினோம்.

~முற்றும்.

# கிறிஸ்மஸ் விளையாட்டு விழா

தூய அந்தோனியார் ஆலயம், மூதூர்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக எம் பங்கில் விளையாட்டு விழா நடைபெற்றது. 28ம் திகதி கொண்டாடப்பட்ட இந்த விழா காலை 8 மணிக்கு ஆரம்பமானது. அதன் துவக்கமாக கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான விளையாட்டுக் களும் இளைஞர், இளம்பெண்கள், பெரியவர்கள் ஆகியோருக்கான பல போட்டிகள் சிறப்பான விதத்தில் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் அனைத்துப் பங்கு மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விளையாட்டு மைதானத்தில் மாலை 4மணிவரை நடைபெற்ற போட்டிகள், அதன் பின் மாலை 5 மணியிலிருந்து அரங்கத்தில் ஆரம்பமானது. அருட்தந்தை ஞானப்பிரகாசியார் மண்டபத்தில் ஆரம்பமான இந்த போட்டி, கவிதை, கட்டுரை, பேச்சு, மனப்பாடம், பாடல் ஆகிய போட்டிகளை பல்வேறு வயதிற்குட்பட்ட குழுவினர்களை உள்ளடக்கி நடைபெற்றது.

இந்த போட்டிகளுக்கு தலைமை தாங்கி அவற்றிற்கு நடுவராக அருட்தந்தை J.அனிஸ்டன் மொறாயஸ் இ.ச. அடிகளார் அரங்கத்தை அலங்கரித்தார்.

போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு போட்டிகளைத் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டன. முன்னதாக பங்கில் நடத்தப்பட்ட கிறிஸ்மஸ் பாலன் குடிலுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இதில் வழங்கப்பட்டன.

போட்டிகள் இனிதாக பாப்பிறைப் பண்ணோடு இரவு 8 மணிக்கு இனிதே நிறைவுற்றன.

தகவல் : அருட்தந்தை அலெக்ஸ் செல்லையா OFM. Cap

புகைப்படம் 12ம் பக்கத்தில்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி

நான் யார் என எனக்குத் தெரியும்

நான் கடவுளின் பிள்ளை (யோவான் 01:12)

நான் இயேசுவின் நண்பன் (யோவான் 15:15)

நான் ஆண்டவரோடு ஒன்றித்திருக்கிறேன் (1கொரி 6:17)

நான் கடவுளால் விலை கொடுத்து மீடகப்பட்டவன் (1கொரி 6:19 -20)

நான் கடவுளின் திருத்தூதன் (எபே01: 1) நான் ஆண்டவரின் சாட்சி (தி.ப01 : 08)

நான் உலகின் உப்பாகவும் ஒளியாகவும் இருக்கின்றேன். (மத்தேயு 5: 13-14)

நான் கிறிஸ்துவின் உடலின் தனி உறுப்பாக இருக்கிறேன். (1கொரி12: 27)

நான் தண்டனைத் தீர்ப்பிலிருந்து விலக்கப்பட்டவன் (உரோமையர்8 :1-2)

நான் விண்ணுலகைத் தாய் நாடாகப் பெற்றவன் (பிலிப்பியர்3 : 20)

நான் எனக்கெதிராய் சாட்டப்படும் குற்றங்களிலிருந்து விலக்கப்பட்டவன் (உரோமையர் 8 :31-34)

நான் கடவுளின் ஒரு நல்லிணக்க அமைச்சர் (2கொறிந்தியர் 5: 17-21)

நான் தந்தை வழியாக தூய ஆவியை அணுகும் பேறு பெற்றிருக்கிறேன். (எபேசியர் 2 :18)

நான் இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். (எபேசியார் 2 : 6)

நான் கடவுளின் அன்பிலிருந்து பிரிக்கப்படவே முடியாது (உரோமையார் 8 : 35 - 39 )

நான் அருட்பொழிவு செய்யப்பட்டு கடவுளின் முத்திரை பதிக்கப் பெற்றவன் ( 2கொரி 1 : 21.22)

நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன் ( யோவான் 15 : 1- 6)

நான் கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் பெற்றுள்ளேன். (எபேசியர் 3 : 12)

நான் எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்யும் ஆற்றல் பெற்றுள்ளேன். (பிலிப்பியர் 4 : 13 )

நானே திராட்சைக்கொடி நீங்கள் அதன் கிளைகள் ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருப்போம். (யோவான் 15: 5)

நான் இயேசுவோடு இணைந்திருப்பதால் நிறைவுபெறுவேன். (கொலோசையர் 2: 10)

நான் கடவுளோடு மறைக்கப்பட்டுள்ளேன். (கொலோசையர் 3: 3)

நான் இயேசுகிறிஸ்துவின் வழியாய் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளேன். (உரோமையர் 5:1)

நான் கடவுளின் உடன் உழைப்பாளன். (1 கொரிந்தியர் - 3:9)

நான் கடவுளின் கைவேலைப்பாடு, நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய் படைக்கப்பட்டுள்ளேன். (எபேசியர் 2 : 10 )

நான் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெறுகின்றேன். (கொலோசையர் 1 : 14)

நான் இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமான பிள்ளையாக முன்குறித்து வைக்கப்பட்டுள்ளேன். (எபேசியர் 1:5)

நான் கடவுளுக்கு உரியவன்

உங்களுக்குத் தெரியுமா?

நீர் யார்?

## இந்த மணியின் ஒலி பரவிடப் பகிரவும்

தகவல்

Internos

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 26ன் முடிவுகள்
## 1 கொரிந்தியர் அதி 14 – 16 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு | ழ | ல் | எ | ழு | ப் | பு | ம் | ஒ | லி |
| ■ | பி | ற | ந் | த | கு | ழ | ந் | தை | ■ |
| கி | றி | ஸ் | து | ஆ | ட் | சி | யா | ள | ர் |
| வு | ■ | ■ | ம் | த | த் | மு | ய | தூ | ■ |
| றி | ■ | ளை | க | ற் | சொ | து | ந் | லை | நா |
| ய | அ | ■ | த | கு | ந் | த | நே | ர | ம் |
| ய் | க் | வி | ண் | மீ | ன் | க | ள் | ■ | றி |
| மெ | கா | ■ | ம் | ரு | த | ர் | யி | உ | ன் |
| ■ | யா | பு | த் | து | யி | ர் | ■ | ■ | ந |
| பா | வ | மே | சா | வி | ன் | கொ | டு | க் | கு |

01. மெய்யறிவு
02. கிறிஸ்து ஆட்சியாளர்
03. அக்காயா
04. குழல் எழுப்பும் ஒலி
05. பிறந்த குழந்தை
06. நன்றி
07. தூய முத்தம்
08. உயிர் தரும்
09. விண்மீன்கள்
10. பாவமே சாவின் கொடுக்கு
11. தகுந்த நேரம்
12. புத்துயிர்
13. நாலைந்து சொற்களை

**பங்குபற்றியவர்கள் – 87 பேர்**
**சரியாக விடையளித்தோர் – 64 பேர்**




### பரிசுக்குரியவர்கள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|
| கோ.அனிற்றா<br>இருதயபுரம்,<br>மூதூர் | ஏ.பொனிபஸ்<br>தாய யோசேப் வாஸ்<br>சிறிய குருமடம்,<br>சாம்பல்தீவு | இ.வினிஸ்டன்,<br>இல: 38/28,<br>6ம் வட்டாரம்,<br>சாம்பல்தீவு |

### பாராட்டுக்குரியவர்கள்

01. S. கிச்சான் செபட் ~ இருதயபுரம்
02. தே.சமில்டன் ~ நிலாவெளி
03. A. சாளினி ~ இருதயபுரம்
04. சா. விதுசாளினி ~ இருதயபுரம்
05. N. மதுசாந் ~ இருதயபுரம்
06. S.கிதுசா ~ இருதயபுரம்
07. பு. தர்சிகா ~ இருதயபுரம்
08. P.பவிகன்னா ~ இருதயபுரம்
09. M.நியூமன் ~ இருதயபுரம்
10. K.சுலக்சனா ~ இருதயபுரம்
11. R.லக்சனா ~ இருதயபுரம்
12. D. லேஷகரன் ~ இருதயபுரம்
13. J.ரியட்னா ~ இருதயபுரம்
14. த. மிஷேல் ~ அன்புவழிபுரம்
15. J. தம்மிக்கா ~ அன்புவழிபுரம்
16. J. பெவன் ~ பேராலயம்
17. யே. டஷசா ~ இருதயபுரம்
18. J. அல்போன்ஸ் ~ இருதயபுரம்
19. D. காமலீற்றா ~ உவர்மலை
20. S. யதுசன் ~ இருதயபுரம்
21. N. சதுஸ்டிகா ~ இருதயபுரம்
22. A. சதுஸ்டிகா ~ இருதயபுரம்
23. அ. டிலக்ஷி ~ இருதயபுரம்
24. J. டிலுசாந்தினி ~ இருதயபுரம்
25. கு. தர்சினி ~ பாலையூற்று
26. கோ. ரக்ஷியா ~ இருதயபுரம்
27. V. கிமாஷன் ~ இருதயபுரம்
28. வெ. அக்டிலக்ஷிகா ~ கும்புறுப்பிட்டி
29. N. சஜீவ்சாந் ~ இருதயபுரம்
30. S. சாருகான் ~ இருதயபுரம்
31. அ. கரோலினி கறீப்திக்கா ~ பேராலயம்
32. V. ஜிவிசாந் ~ இருதயபுரம்
33. S. அபிலாசினி ~ இருதயபுரம்
34. கெ. கெனிஸ்ரா ~ இருதயபுரம்
35. ஞ. திசாணி ~ இருதயபுரம்
36. கே.பவித்திரா ~ இருதயபுரம்
37. டொ. சஜீவன் ~ சிறிய குருமடம் (சாம்பல்தீவு)
38. J. பிரதிக்சா ~ இருதயபுரம்
39. B. சசிகாந்தன் ~ இருதயபுரம்
40. P.பிரவீனா ~ குவாடலூப்பே
41. ஜோ.அ. அமலராணி ~ அக்புவழிபுரம்
42. R. சுமித்தா ~ இருதயபுரம்
43. V.யுவராஜ் ~ இருதயபுரம்
44. சி. சதுஸ்டிகா ~ இருதயபுரம்
45. R. அபிராமி ~ இருதயபுரம்
46. R. கேசவி ~ இருதயபுரம்
47. இ.முதுந்தன் ~ இருதயபுரம்
48. கொ.நிலக்சன் பாத்திலட் ~ சிறிய குருமடம் (சாம்பல்தீவு)
49. V.ருக்ஷிகா ~ இருதயபுரம்
50. R. டிசாணி ~ இருதயபுரம்
51. S. கம்சாளினி ~ இருதயபுரம்
52. ப.விதுர்ஷினி ~ இருதயபுரம்
53. J.சர்மிதா ~ இருதயபுரம்
54. J. நிதர்சன் ~ இருதயபுரம்
55. நி. சிவசாந் ~ இருதயபுரம்
56. J. சர்மிசா ~ இருதயபுரம்
57. J. ரெபேக்கா ~ இருதயபுரம்
58. அ. கிதுசாளினி ~ இருதயபுரம்
59. S.பிஷசா ~ இருதயபுரம்
60. M. ரக்ஷனா ~ இருதயபுரம்
61. T. ஜெரோம் ~ சிறிய குருமடம் (சாம்பல்தீவு)



## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 27
## 2 கொரிந்தியர் அதி 1 – 4 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | ப | | | | | ■ | ■ | ஆ |
| | ■ | ■ | சி | | | | | | |
| | து | | ■ | உ | | ஆ | ■ | ■ | |
| | | | வ | | | | | மு | |
| | | | | | | | | | |
| | | | | | க | | | | |
| | | | | ■ | ■ | ■ | | | |
| | | | ம | | | ■ | தி | ■ | |
| | ■ | நா | ■ | | | து | ■ | ■ | |
| ந | ■ | | | | | | | மி | |


01. நன்......செலு....துவர்
02. துரோ......
03. பறைசா......றி
04. து......ச்ச.......டு
05. ஆற்.....ல்
06. உ........ர்வு
07. நாண.....த்தோ.......ம்
08. கடி.....ம்
09. திருப்ப.....
10. மன......
11. ஆ......தல் அளி......ங்கள்
12. வ....லமை
13. முக்.....டு
14. சீறி...... கா.....ம்
15. மி......ந்த அன்.......

முடிவுத்திகதி : 25.02.2018

பெயர் :........................................
முகவரி :........................................
பங்கு :........................................

## ஹாய் குட்டிஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 34
## 2குறிப்பேடு 01~12 அதிகாரங்கள்

01. ஆண்டவரின் இல்லத்தைக் கட்டி முடிப்பதற்கு சாலமோன் அரசனுக்கு எத்தனை வருடங்கள் சென்றது?
விடை : ........................................
02. சாலமோன் அரசன் திருக்கோவிலை அவரது தந்தையான தாவீது அரசனுக்கு கடவுள் தோன்றிய மலைமீது கட்டினார். அம்மலையின் பெயர் என்ன?
விடை : ........................................
03. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தர்சீசிலிருந்து கப்பல்கள், பொன், வெள்ளி, தந்தம் இவற்றோடு வேறு எவற்றை ஏற்றிக்கொண்டு வந்தது?
விடை : ........................................
04. கடவுள் சாலமோனுக்கு எவற்றை அளித்தார்?
விடை : ........................................
05. கடவுளின் இல்லத்தை நிரப்பியது எது?
விடை : ........................................
06. குருக்கள் எத்தகைய ஆடைகளை அணிந்து கொள்வார்கள்?
விடை : ........................................
07. ஆண்டவரது இல்லத்தின் கருவூலங்கள், அரண்மனைச் செல்வங்கள் அனைத்தையும் சூறையாடியவர் யார்?
விடை : ........................................
08. ரெகபெயாம் எருசலேமுக்குத் திரும்பியவுடன் எந்த குலத்தாரிலிருந்து ஒரு இலட்சத்து எண்பதாயிரம் போர்வீரர்களை திரட்டினார்?
விடை : ........................................
09. அரசன் ரெகபெயாம் கட்டாய வேலைத்திட்டத்தை முன்பு செயல்படுத்தியவனான யாரை இஸ்ரயேல் மக்களிடம் அனுப்பினார்?
விடை : ........................................
10. கடவுளின் பலியை ஏற்றுக் கொள்வதன் அடையாளம் எது?
விடை : ........................................
11. சாலமோன் தன் தந்தை தாவீதைப் போன்று இஸ்ரயேல் நாட்டில் வாழ்ந்து வந்த அன்னியரைக் கணக்கிட்டார். அவர்களின் எண்ணிக்கை? (இலக்கத்தில் எழுதவும்)
விடை : ........................................
12. பாத்திரங்களையும், சாம்பல் அள்ளு கருவிகளையும், கிண்ணங்களையும் செய்தவர் யார்?
விடை : ........................................



பெயர் :........................................
முகவரி :........................................
பங்கு : ........................................
தரம் : ........................................
முடிவுத்திகதி : 25.02.2018

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டும் போட்டி முடிவுகள்



போட்டியில் பங்குபற்றியோர் ~ 10 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|
| நேமிநாதன் சரணியா<br>5ம் வட்டாரம்,<br>கும்புறுப்பிட்டி | S. வெலோரியா<br>21/3, வித்தியாலயம் வீதி,<br>திருகோணமலை | சு.றொவீனா<br>இல. 52, பாத்திமா வீதி,<br>திருகோணமலை |


பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி

நீதிமான்கள் உரிய காலத்துக்கு முன் இறந்தாலும் இளைப்பாற்றி அடைவார்கள். சா.மோ.ஞா 4 : 7

மலர்வு 1984 - 11 - 16



உதிர்வு 2014 - 01 - 15

## Dr. ஜே.றோபின்சன்

பரிசுத்தமுள்ள பிதாவே உமக்குக் கோடி ஸ்தோத்திரம்
இயேசு ஆண்டவரே நித்திய வாழ்வை எமக்கு வாக்களித்து அந்த
வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்கு இடம் தயார் செய்து வைத்து ஏற்ற
வேளையில் அந்த பரலோகராஜ்ய மகிமையில் ஒளியின் முடி
சூட்டுவதற்காக பெயர் சொல்லி அழைப்பவரே! நீர் வாக்களித்தபடியே
உமது ஊழியன் றொபின்சனை ஏற்ற வேளையில் பெயர் சொல்லி
அழைத்தமைக்காக கோடி நன்றி சொல்லி உம்மை ஆராதித்துப்
போற்றுகின்றோம். இவரது ஆன்மாவை பரலோக மகிமையால் கிரீடம்
சூட்டி ஒளியின் சாதனமாக நித்திய ஆனந்த மகிழ்ச்சியையும்,
நிலைவாழ்வு உரிமைப்பேற்றையும் இவருக்கு நிறைவாக கொடுத்தருள
வேண்டுமென்று இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் ஜெபிக்கின்றோம்
எங்கள் நல்ல பிதாவே ஆமென் !

தகவல் : தாயார்

# கிறிஸ்மஸ் பகிர்வு





# கிறிஸ்மஸ் விளையாட்டு விழா











# புனித நாட்டுப் பயணம்

புனித நாட்டுக்கான இரண்டாவது பயணத்தை அலை ஓசை கலைத் தொடர்பகம் ஏற்பாடு செய்துள்ளது.

**இரு வழிப் போக்குவரத்துடன் உணவு, தங்குமிடம், பிரயாணக் காப்புறுதி உட்பட**

**ஒருவருக்கான கட்டணம் ரூ 150,000/=**

- Church of the Annunciation
- Garden of Gethsemane
- Mount of Beatitudes
- Church of Multiplication
- Baptism
- Boat Ride in the sea of Galilee
- Church of Agony
- Calvary-Tomb of Jesus
- Jericho/Sycamore tree also including a visit to Nazareth
- Church of the Ascension
- Last Supper Room
- Bethlehem
- Church of Nativity
- Church of Holy Sepulcher
- Way of the Cross
- Cana
- Milk Grotto




- ஸ்டார் ஹோட்டல்களில் தங்குமிட வசதி
- கேபிள் கார் பயணம் ஜெரிக்கோவிலிருந்து ஆண்டவர் சோதிக்கப்பட்ட மலை வரை
- 2018ம் ஆண்டில் புறப்படும் திகதி 2018.06.18
- முதல் பதிவு செய்யும் 10 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- பதிவு செய்ய வேண்டிய இறுதித் திகதி 2018.02.25





தொடர்புகளுக்கு :
**அருட்பணி றொஹான் பேர்னாட்,**
பணிப்பாளர், அலை ஓசை கலைத் தொடர்பகம்,
இல.17 புனித அந்தோனியார் வீதி,
திருகோணமலை.
தொ.பே. - 0776771119



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org